Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 |விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :147 சித்திரை 09ஆம் நாள் புதன்கிழமை 22 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கோத்தாவின் இறக்குமதியே 'கொரோனா'!

கொழும்பு, ஏப். 22

"அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக கொரோனா வைரஸ் நிலைவரம் தொடர்பில் பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை வெளியிட்டு,

12 >

# சிறுவனின் தலைமையிலான திருட்டுக் கும்பல் மடக்கிப் பிடிப்பு

- வல்வெட்டித்துறைப் பொலிஸார் அதிரடி
- கைதானோர் போதைப்பொருளுக்கு அடிமை
- 15 பவுண் நகைகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

15 வயதுச் சிறுவன் ஒருவன் தலைமையில் இயங்கிய 5 பேர் கொண்ட திருட்டுக் கும்பல் ஒன்று , வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் பொறியில் சிக்கியது. அந்தக் கும்பலைச் சேர்ந்த ஐவரும் கைது செய்யப்பட்டனர் அவர்களிடமிருந்து 15 பவுண் நகை, 50 ஆயிரம் ரூபா பணம் என்பனவும் மீட்கப்பட்டன. அத்தோடு திருட்டு நகைகளை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிய பெண்ணொருவரிடம் இருந்து பல அடகுப் பற்றுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதால், இன்னும் பல திருட்டு நகைகளை மீட்க முடியும் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

02 >

## 310 ஆக அதிகரித்தது கொரோனா தொற்று

*102 பேர் குணமடைவு*

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 6 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து கொரோனா தொற்றுக்கு இலக்காகியவர்களின் மொத்த எண்ணிக்கை 304 இலிருந்து 310 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்ட 6 பேரில் 5 பேர் கொழும்பு 12, வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க மாவத்தையில் தனிமைப்ப


02 >

## தொட்டியில் வீழ்ந்து சிறுமி சாவு

முல்லைத்தீவு, ஏப். 22

முல்லைத்தீவில் சிறுமி ஒருவர் வீட்டிலுள்ள தண்ணீர்த் தொட்டியில் வீழ்ந்து உயிரிழந்த சோக சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

02 >




## கொழும்பில் பாதிப்பு 115

கொழும்பு, ஏப். 22

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 115ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 45 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 32 பேரும்,

02 >

## ஜூன் 20 இல் தேர்தல் நடப்பது சந்தேகமே!

*2 ஆம் திகதி ஆராய்வு ஆணையாளர் அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 22

ஜுன் 20 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், தற்போது அதை உறுதியாகக் கூறமுடியாது. மே 2 அல்லது 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சந்திப்புகளின் பின்னரே உறுதியான தீர்மானம் அறிவிக்கப்ப

12 >

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் கொரோனா தாக்கம் ஏற்படலாம்

மருத்துவ அதிகாரிகள் சங்கம் அச்சம்

02 >

## மாவட்டச் செயலர் மீது நடவடிக்கை எடுக்கவும்

*தே.ஆணைக்குழுவிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு கொடையாளர்களால் வழங்கப்பட்ட நிவாரணத்தை, அரசியல் கட்சிக்கு வழங்கியமை

02 >

## நேற்று மட்டும் 1,000 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஏப். 22

கொழும்பு 12, வாழைத்தோட்டம் பண்டாரநாயக்க மாவத்தையில் 212 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 10 பேர் நேற்று தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள்

12 >

ஜூன் 2க்கு முன் தேர்தல் தவறின்

## நாடாளுமன்றைக் கூட்ட சட்ட அதிகாரம் இல்லை

*ஜனாதிபதி அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 22

"ஜுன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்படாவிடின், நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு என்னால் முடியாது. பழைய நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவதற்கும் அவசியமில்லை. அதற்கான சட்டரீதியான அதிகாரமும் இல்லை" என்று தெரிவித்துள்ளார், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

இது தொடர்பில்

12 >

## விசாரணைக்கு தயார்

*மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு கொடையாளர்கள் வழங்கிய நிவாரணம் அரசியல் கட்சிக்கு வழங்கியமை தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் எத்தகைய விசாரணைகள்

02 >

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிறுவனின்...

இந்தச் சம்பவம் பற்றி பொலிஸ் விசாரணையில் தெரியவந்த விடயங்கள் வருமாறு,

**புகைப்படத்தைக் காட்டி மிரட்டி திருட்டு**

இந்தக் கும்பலைச் சேர்ந்த ஐவரும் வல்வெட்டித்துறை, பொலிகண்டி மற்றும் இலக்கணாவத்தை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

இருவருக்கு 15 வயது. மற்றையோர் 18,21,26 வயதுடையவர்கள் . இவர்களில் இருவர் சகோதரர்கள்.

முதலில் இவர்கள் 15 வயதுச் சிறுவன் தலைமையில் நான்கு பேர் கொண்ட கும்பலாகவே திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் இவர்கள் 15 வயதுடைய இன்னொரு சிறுவனை அழைத்து அவருடைய வாயில் சிகரெட் வைத்து புகைப்பது போன்று ஒளிப்படம் எடுத்துள்ளனர். அதை அந்தச் சிறுவனுக்கே காட்டி "உன் வீட்டிலுள்ள நகைகள், பணம் என்பனவற்றை உன் வீட்டுக்காரருக்குத் தெரியாது எடுத்துவந்து எங்களிடம் தரவேண்டும். மறுத்தால் சிகரெட் புகைப்பது போன்ற படத்தை இணையத்தில் பதிவிட்டுவிடுவோம்" என்று அச்சுறுத்தியுள்ளனர்.

**அந்த 'நேர்மை' பிடிச்சிருக்கு**

அதனால் அந்தச் சிறுவன் தன் வீட்டிலுள்ள தாயின் நகைகள் மற்றும் பணத்தை சில நாள்களாக எடுத்துச் சென்று அந்தக் கும்பலிடம் கொடுத்துள்ளான். அவ்வாறு தாயின் காப்பு, சங்கிலி என்று சுமார் 15 பவுண் நகைகளை சிறுவன் தன் வீட்டிலேயே திருடிச் சென்று அந்தக் கும்பலிடம் வழங்கியுள்ளான். கனடா நாட்டுபணம் இலங்கைப் பெறுமதியில் சுமார் 50 ஆயிரம் ரூபாவையும் தன்வீட்டிலேயே திருடிச் சென்று கொடுத்துள்ளான்.

பின்னர் அந்தச் சிறுவனின் 'நேர்மை' பிடித்துக் கொண்டதால் , அவனையும் தம்முடன் இணைத்துக் கொண்டது இந்தத் திருட்டுக் கும்பல். பின்னர் இவர்கள் ஒரு வீட்டில் கூரை பிரித்து நுழைந்து அலுமாரியிலிருந்த நகைகளைத் திருடியுள்ளனர். மற்றொரு வீட்டுக்குள் நுழைய முடியாததால், வீட்டில் நின்ற ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் 'டிக்கி'யில் இருந்த 15 ஆயிரம்ரூபா பணத்தைத்திருடியுள்ளனர். மற்றொரு வீட்டிலும் இவ்வாறு நகைகளும் பணத்தையும் திருடியுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

**திருட்டு நகைகளை வாங்கிய பெண்**

இந்தக் கும்பல் திருடிய நகைகளை உடுப்பிட்டியிலுள்ள ஒரு பெண்ணிடம் மிகக் குறைந்த விலையில் விற்றுள்ளனர்.

அந்தப் பெண் நகைகளை வங்கிகளில் அடகு வைத்துள்ளார். அதற்கான ஏராளமான பற்றுச்சீட்டுக்கள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமுள்ள பற்றுச் சீட்டுக்களின் தொகையை வைத்து குறித்த பெண்மணி வேறுபலகொள்ளை மற்றும் திருட்டுக்களுடன் தொடர்புடைய நகைகளையும் பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த பெண்ணிடமிருந்து உருக்கிய தங்கத்தையும் மீட்டதாகப் பொலிஸார் கூறினர். இதுவரை திருட்டுக் கும்பலிடமிருந்து சுமார் 15 பவுண் நகைகள், 50 ஆயிரம் ரூபா பணம், அலைபேசி, டப், என்பன மீட்கப்பட்டுள்ளன.

வேறொரு திருட்டுச் சம்பவம் தொடர்பான சந்தேகத்தின் பேரில் இந்தத் திருட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அப்போது அவரது அலைபேசியில் சில சந்தேகத்துகிடமான உரையாடல்களின் ஒலிப்பதிவுகள் பொலிஸாரிடம் சிக்கின, அதனையடுத்தே விசாரணைகளின் போது 15 வயதுச் சிறுவனின் தலைமையில் இயங்கும் திருட்டுக் கும்பல் பற்றிய அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிவந்தன. அதனையடுத்து அதிரடி வேட்டையில் இறங்கிய பொலிஸார், ஐந்து பேரையும் மடக்கிப் பிடித்தனர்.

குறித்த ஐவர் கொண்ட கும்பல் மேலும் பல இடங்களில் இடம்பெற்றதிருட்டுக்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-26)

## 310....

டுத்தப்பட்டவர்கள் எனவும், மற்றவர் இரத்தினபுரியைச் சேர்ந்தவர் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதற்கமைய, பண்டாரநாயக்க மாவத்தையில் கடந்த 15ஆம் திகதியிலிருந்து இதுவரை 64 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தியாவின், தம்பதிவ சென்று வந்த குறித்த பகுதியைச் சேர்ந்த 59 வயதான பெண் ஒருவர் கடந்த மார்ச் 15 இல் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து அவருடைய குடும்பத்தில் அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதோடு, அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை தற்போது சோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதில் அடையாளம் காணப்பட்ட பெரும்பாலானோர் எவ்வித அறிகுறிகளும் இன்றியவர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய மேலும் 04 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதுவரை 102 பேர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

201 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், 158 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (து-22)

## கொழும்பில்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்தில் 07 பேரும், இரத்தினபுரிமாவட்டத்தில் 06 பேரும், கேகாலை மாவட்டத்தில் 03 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், குருநாகல், மாத்தறை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு, பதுளை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 10 மாவட்டங்களில் இன்னும் எவரும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை.

இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்களில் இருந்து 38 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகள் 03 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (து-22)

## மாவட்டச்...

தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் தேர்தலுக்கான தெரிவத்தாட்சி அலுவலராக உள்ள நிலையில் இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்த நிவாரணங்களை மாவட்டச் செயலர் அரசியல் கட்சி ஒன்றுக்கு வழங்கியுள்ளார். தேர்தல் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றமை மிக மோசமான விடயம். மாவட்டச் செயலரே தெரிவத்தாட்சி அலுவலராகவும் உள்ளார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதிலளித்தார். (ஒ,5)

## விசாரணைக்கு...

மேற்கொள்ளப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்குத் தயாராகவுள்ளேன் இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு 19, 20 பேர் தமது உதவிப் பொருள்களை எமக்கு தந்திருந்தார்கள். நாம் பிரதேச செயலகங்கள் மூலமாகவும், எமக்கு கிடைத்த கோரிக்கைகளின் அடிப்படையிலும் அவற்றை வழங்கியிருந்தோம். அந்தந்த பிரதேச செயலகம், கிராமசேவகர்ஊடாகவேவழங்கப்பட்டன. அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டியல் எம்மிடமுள்ளது. மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்ட பொருள்களை அரசியல் கட்சி ஒன்றுக்கு வழங்கியதாகத் தெரிவிக்கும் குற்றச்சாட்டை முன்வைத்தவர்கள் ஆதாரம் இருப்பின் மேலிடத்துக்கு அவற்றை வழங்கி நடவடிக்கை எடுக்கலாம். நாம் மாவட்ட நிர்வாகிகள். நாம் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். அரசியல் பேசுவதற்கோ, அரசியல் கட்சி சார்பாக நடப்பதற்கோ எமக்கு உரிமையில்லை. நாம் நிர்வாகத்தையே செய்கிறோம். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையும், உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையிலும் எமக்கு இவ்வாறான பழிச்சொல்கள் மிகுந்த கவலையை அளிக்கின்றன. அதிகாரிகள் என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுத்து செயற்படுத்தி வருகிறோம். தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் கூறியதில் உண்மை இருந்தால் அவர் தாராளமாக நடவடிக்கை எடுக்கலாம். அவர் அவ்வாறு தெரிவித்தமை கவலையை ஏற்படுத்தியுள்ளது. நன்மதிப்பு கொஞ்சம் குறைந்தாலும், மாவட்டச் செயலர் என்ற கதிரைக்கு இழுக்கு ஏற்படுமாயின் நான் அந்த இடத்தில் இருப்பதில் பிரயோசனமில்லை. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நான் செயற்படுகின்றேன். இது தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டால் அதனை நான் நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன், என்றார். (ஒ,5)

## மீண்டும்...

யாழ்ப்பாணம், ஏப். 22

ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணத்தில் தளர்த்தப்பட்டு உள்ளது. ஆனாலும் நாட்டில் கொரோனா தொற்றும் வாய்ப்புள்ள அசாதாரண நிலை காரணமாக பொது மக்கள் சுகாதாரத்துறையால் கூறப்படுகின்ற விடயங்களை கடைப்பிடிக்காமை மீண்டும் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தாக்கம் ஏற்படக் கூடுமோ என்று அஞ்சுகின்றோம். இவ்வாறு இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் மக்கள் மதுபானக்கடைகளில் அளவுக்கதிகமாக கூடியதும் அவர்கள் அளவுக்கதிகமாகக் கொள்வனவு செய்ததையும் இன்றைய பத்திரிகைள் மூலம் அனைவரும் அறிந்து கொண்டோம். கொரோனாத் தொற்று நோய்க் காலப் பகுதியில் மதுபானம், புகைத்தல் என்பன கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

மதுபானம் அருந்துபவர்கள் சமூகத்தில் சமூக் விலகலைக் கடைப்பிடிக்க மாட்டார்கள்.

மதுபானம் அருந்துபவர்கள், குழுக்களாகவே அருந்துகின்றார்கள். எனவே சமூகத் தூரத்தைப் பராமரிக்க முடியாது. அது மட்டுமல்ல ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு இலகுவில் தொற்றுவதற்கு சந்தர்ப்பம் அதிகம்.

இந்தக் காலகட்டத்தில் மது அருந்துவதால் யாழ்ப்பாணத்தில் அதிக துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிக்கும். இதனால் இதில் ஈடுபடுபவர்களைப் பொலிஸார் தேவையின்றி தலையிட வேண்டியிருக்கும்.

இந்த காலகட்டத்தில் சமூகத்துக்குள் தேவையற்ற ஒழுக்கச்சரிவு ஏற்படும்.

மதுபானம் பயன்படுத்துபவர்களில் சிலர் புகைபிடிக்கும் பழக்கத்திலும் ஈடுபடுவர். புகைபிடிக்கும் நபர்கள் கொவிட்19 நோயால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு இந்த நோய் மோசமான விளைவுகளை மட்டுமல்ல உயிரிழப்பையும் ஏற்படுத்தலாம்.

புகையிலைப் பொருள்களையும் புகைப்பதைத் தவிர்க்குமாறும், மதுபானம் அருந்துவதை தவிர்க்குமாறும் நாங்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றோம், என்றுள்ளது. (ஒ,5),

## தொட்டியில்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வளநகர் மேற்கு 05 ஆம் யுனிற்றில் வசிக்கும் றாகுலன் துசானி (வயது 4) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மல்லாவிப் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் இறப்பு விசாரணைக்காக சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(ப-19)

## பிடிபட்டது கசிப்பு

பளை, ஏப்.22
பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஞ்சி ஊர் பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முன் தினம் முற்றுகையிடப்பட்டது. இதன்போது சந்தேகநபர்கள் மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 630 லீற்றர் கோடா, 20 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன.
மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-113)

## ஊரடங்கை தளர்த்தி விட்டு மக்களை குறைசொல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 22
கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு அரசு முறையானதொரு நிகழ்ச்சித்திட்டத்தை பின்பற்றிய போதும் மக்கள் அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றாமை நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு தடையாக அமைந்துள்ளது. மக்கள் வாழ்க்கையை இயல்புநிலைக்கு கொண்டு வரும் நோக்குடன் ஊரடங்கு சட்டத்தை தளர்த்தி சேவைகளை முன்னெடுக்கும் போதும் வைரஸை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஊரடங்கு சட்டத்தை தளர்த்தியதன் பின்னர் வைரஸை கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையில் குறைந்தளவானோரின் பங்குபற்றுதலுடன் அத்தியாவசிய சேவைகளை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரச மற்றும் தனியார் துறைகளின் சேவைகளை மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலையில் பேணுவதற்கு உதவும் வகையில் திட்டமிடுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.
நீர்க்குழாய்களை பதித்தல், வீதிகளை நிர்மாணித்தல் போன்ற கட்டுப்பாட்டுடன் செய்யக்கூடிய அபிவிருத்தி பணிகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். ஊழியர்களை கடமைக்காக அழைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றியும் அறிவுறுத்திய ஜனாதிபதி வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை பின்பற்றி ஊழியர்களை அழைப்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மூலம் விவசாய அறுவடைகளை கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் விவசாயிகளுக்கு பெரிய நிவாரணம் கிடைக்கும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.
மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் வழங்கும் மருந்துகளை தபால் அலுவலகத்தின் ஊடாக விநியோகிப்பதன் மூலம் ஊரடங்கு சட்டம் நடைமுறையிலிருந்த காலத்தில் நோயாளிகளுக்கு பெரும் சேவையொன்று வழங்கப்பட்டது. தபால் அலுவலகத்தின் ஊடாக பட்டியல்களை சேகரித்தல், வங்கி வைப்புகளை பொறுப்பேற்றல் உள்ளிட்ட வழங்க முடியுமான சேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஒ.5)

### ஆனையிறவு சோதனைச்சாவடியில் வைத்து

# சிவில் நிர்வாக சேவைகளை தூக்கி வீசுகின்றது இராணுவம்?

### மாநகர முன்னாள் உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாக சேவைகள் அனைத்தும் ஆனையிறவு இராணுவச்சோதனைச் சாவடியில் தூக்கி வீசப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள கொழும்பு மாநகர சபை உறுப்பினர் உமா சந்திரபிரகாஷ், வைரஸின் ஆபத்தை உணர்ந்தும் அரசு தமது சுய அரசியலுக்காக ஊரடங்குச் சட்டத்தை நீக்கி உள்ளதா என்றும் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டம் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நிலையில் அபாய வலயங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், திடீரென அதிலிருந்து யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கும் பகுதியளவில் நீக்கப்பட்டுள்ளது.
இதனால் மக்கள் தங்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். இதன் விளைவுகள் பாரதூரமானவை என்று அரசுக்குத் தெரிந்திருந்தும் ஊரடங்கை பகுதியளவில் நீக்கியுள்ளது. இதில் பெரும் சந்தேகம் எழுகின்றது. தேர்தலை இலக்காகக் கொண்டே அரசு நகர்ந்து கொண்டிருக்கின்றது. தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் வரையில் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது முடங்கியுள்ளனர். அவர்கள் தத்தம் இருப்பிடங்களுக்குச் செல்வதற்காக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் ஊடாக அனுமதி பெற்று செல்கின்றனர். எனினும், அந்த அனுமதிகள் அனைத்தும் ஆனையிறவு இராணுவச் சோதனைச் சாவடியில், நிராகரிக்கப்படுகின்றன.
இது யாழ்ப்பாண மாவட்டத்தின் சிவில் நிர்வாகம் அனைத்தும் ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் தூக்கி வீசப்படுகின்றமையை எடுத்துக்காட்டுகின்றது. சிவில் நிர்வாகம் அனைத்தும் முடக்கப்பட்டு இராணுவ ஆட்சி நோக்கி நகர்கின்றதா?
ஊரடங்கு தளர்த்தப்படும்போது மக்கள் ஒன்று கூடுகின்றனர். இதனால் நோய்த் தாக்கத்தின் வேகம் அதிகமாகப் பரவக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்த விடயம் அரசுக்குத் தெரிந்திருந்தும் தெரியாததுபோல் இருக்கின்றதா? தேர்தல் அரசியலுக்காக மக்களைப் பலிக்கடா ஆக்குகின்றதா? என்று தெரியவில்லை - என்றார். (த-20)

## மீன் வியாபாரிக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம்,ஏப்.22
கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இறுதியாக இனங்காணப்பட்ட நபர் மீன் வியாபாரி என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
குறித்த நபர் பிலியந்தல பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அப்பகுதியிலேயே மீன் வியாபாரத்தில் ஈடுபட்டவர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
குறித்த நபருடன் சேர்த்து இதுவரை இலங்கையில் 304 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இனங்காணப்பட்டுள்ளனர்.
இதேவேளை, குறித்த மீன் வியாபாரிக்கு தொற்று இருப்பது உறுதியானதை அடுத்து பேலியகொட மீன்சந்தை இன்றுமுதல் 3 நாள்களுக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீகவும் அந்தச் சந்தை தொற்று நீக்கிய பின்னரே மக்களின் பாவனைக்காக திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-22)

## பருத்தித்துறையிலிருந்து 15 பஸ்கள் சேவையில்

பருத்தித்துறை,ஏப்.22
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம், கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்துக்கு நெல்லிடி வல்வெட்டித்துறை ஊடாகவும், சாவகச்சேரிக்கு கொடிகாமம் ஊடாகவும், கிளிநொச்சிக்கு கொடிகாமம் பளை ஊடாகவும், பொற்பதிக்கு அம்பன் வைத்தியசாலை ஊடாகவும் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளிவில் இடம்பெற்று வருகின்றன
இந்தச் சேவைகளுக்கென 15 பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும், வெளிமாவட்டங்களுக்குமான பஸ் சேவைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. (க-173)

## பசுவை திருடினரென இருவர் நேற்று கைது

தலவாக்கலை, ஏப். 22
பசுவைத் திருடி, இறைச்சிக்காகக் கொண்டு சென்ற இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.
தலவாக்கலை நகரத்தின் ஊடாக பயணித்த வாகனம் ஒன்று சோதனையிடப்பட்ட போது, அதில் பசு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டபோதே பசு, திருடப்பட்டு, இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்டது தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். வாகனச் சாரதி உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் தலவாக்கலை பகுதியைச் சேர்ந்தவர்களென்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## தூக்கில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், ஏப். 22
தவறான முடிவெடுத்ததில் இளைஞன் ஒருவன் தன் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் திவாகரன் (வயது 21) என்ற இளைஞனே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
கொட்டடியில் உள்ள அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ப-26)

## தவறிவிட்டது

கடந்த 24.03.2020 அன்று அன்ரனி யாழ்டன் (தே.அ.அ. இல. 810372923 V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதி பத்திரம், இரண்டு மோட்டார் சைக்கிள்களின் வாகன வரி அனுமதிப்பத்திரங்கள் உள்ளடங்கிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு: 0778692155, 077 186 7831**



## விற்பனைக்கு

குத்தரிசி 3000 KG
விற்பனைக்கு உண்டு.
10 KG Bag ஒன்று 1130/=

தொடர்புகளுக்கு. 021 222 2846 , 0779050186

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 09 . 01 . 1946



இறைவன் அடியில் 20 . 04 . 2020

### திருமதி ஸ்ரீஜெகதேவி வைரமுத்து

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீஜெகதேவி வைரமுத்து திங்கட்கிழமை (20.04.2020) அன்று கொழும்பு, கல்யாணி வீதியிலுள்ள முதியோர் இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி புனிதவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற வைரமுத்து (ஓய்வு பெற்ற பிரதம மருந்தாளர் - போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், சிவப்பிரியாவின் (அவுஸ்திரேலியா) அன்புத் தாயாரும், இந்துநேசனின் (அவுஸ்திரேலியா) அன்பு மாமியாரும், ஸ்ரீசக்திவேல், ஸ்ரீமயூரன், ஸ்ரீரஞ்சனி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மாதுமை, வைகுந்தன் தருண் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.04.2020) பிற்பகல் 2 மணியளவில் கிரிலப்பனை பொது மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்

தொலைபேசி : (+61) 410302123

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிராசா இராசபூபதி



கணேஸ்வரம், அளவெட்டியை பிறப்பிடமாகவும், பாரதி வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா இராசபூபதி நேற்று (21.04.2020) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் - அருமை தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-இலட்சுமி தம்பதிகளின் மருமகளும் காலஞ் சென்ற மாணிக்கம் தம்பிராசாவின் அன்பு மனைவியும் செல்வச்சந்திரன், பிரபாசங்கர், காலஞ்சென்ற சதீஸ், சந்திரன் மற்றும் வாசுகி, சுதாகர் (கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் வசந்தாதேவி, உதமதாசன், பகீரததாசன் ஆகியோரின் அன்பு மாமியும் அஜந்தன் (ஆசிரியர்- கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம், வவுனியா), கஜேந்தினி, துஷாந்தினி, சுயந்தன், பகீரதன், சிந்துஜா (மாணவி - கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), நிருஷனா (மாணவி - ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் மங்களம், சிவஞானம், சிவலிங்கம், லீலாவதி காலஞ்சென்ற திலகவதி மற்றும் குமார், செல்லம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பசுபதி மற்றும் சதாசிவம், வன்னமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2020) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
29.03.1942

இறைவன் அடியில்
20.04.2020

### திருமதி சகுந்தலாதேவி வரதராஜா (சகுந்தலா)

யாழ். ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி வரதராஜா கடந்த (20.04.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கொழும்பு வர்த்தகர் வரதராஜாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவகுமார், விஜயகுமார் (ரஜி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாசினி (சுபா), வத்சலா ஆகியோரின் பாசமிகு மாமியும், அஸ்வினி, ஆரணி, நாராயணன் (ராஜன்), பிரவீன், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.04.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

T.P: 077 809 5745

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 ... 08 ... 1933



மறைவு 20 ... 04 ... 2020

### திருமதி அன்னலக்ஷ்மி குமாரசாமி

நெடுந்தீவு பெரியதுறையைப் பூர்வீகமாகவும், யாழ்ப்பாணம் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலக்ஷ்மி குமாரசாமி நேற்று முன்தினம் (20.04.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - தெய்வானைப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சந்தனநங்கை மற்றும் சியாமளா, கிருஷ்ணவேணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணன், குலவீரசிங்கம், சண்முகதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷ்யந்தன், வாசுகி, ஜெகன், மீரா, சுபானி, தயானி, செந்தூரன், பிரதீபன், சங்கீதா, சர்மிலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிஷானி, அனுகாஷினி, ஆரசி, ஆகாஷ், சர்வேஷ், ஆத்மிகா, ரம்மியன், ஆதவி, மதுஷா, கபிலன், வினுஷா, யகிலன், ஆவா, எஸ்தீபன், தாகோ சித்தார்த், நேகா, மாயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மு. கிருஷ்ணன் (மருமகன்)
(அமுல் கிறீம் கவுஸ், அமுல் உயர்தர சைவ உணவகம்)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அழிவுக்கு வழிகோலும் முடிவுகள்

ஊரடங்கு தளர்த்தப்பட்டவுடன் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் அதிகளவான சனக்கூட்டம்நின்றிருந்த இடங்களில் மதுபானநிலையங்களுக்குத் தான் முதலிடம். ஏறக்குறைய ஒரு மாதமாக மதுபான நிலையங்கள் பூட்டப்பட்டதால் குடிமகன்கள் , தவித்துப் போய் இருந்தார்கள். குடிக்கு முற்றுமுழுதாக அடிமையானவர்கள் உள்ளூரில் இரகசியமாகக் காய்ச்சப்படும் கசிப்பைத் தேடி ஓடினார்கள். இதனால் கசிப்புக்குத் திடீரென மவுசு அதிகரிக்க, அதன் உற்பத்தி உச்சத்தை எட்டத் தொடங்கியது. என்றாலும் அவற்றையும் பொலிஸார் இயன்றளவு மோப்பம் பிடித்து வேட்டையாடத் தொடங்க, வெறும் வாயை மென்று கொண்டு இருக்க வேண்டிய 'இக்கட்டு நிலை' பெருங்குடிமகன்களுக்கு.

இப்படிப்பட்ட நிலையில் தான் கடந்த 20 ஆம் திகதி ஊரடங்கு தளர்த்தப்பட்டு, மதுபானக் கடைகளும் திறக்கப்படும் என்ற செய்தி இவர்களின் காதில் விழுந்தது. அவ்வளவுதான், மதுபானசாலைகள் திறக்க முன்னதாகவே வரிசை கட்டி, கையில் உள்ள காசையெல்லாம் 'தண்ணீராகக்' கரைத்து, மதுப்போத்தல்களைச் சுமந்து கொண்டு சென்றார்கள் இவர்கள். சிலவேளைகளில் அப்படி அவர்கள் மதுவுக்காகச் செலவழித்த அந்தப் பணம் தான் அன்றைக்கு , அவர் வீட்டில் உணவு தயாரிக்கவென கடைசியாகக் கையில் மிஞ்சிய தொகையாக இருக்கக் கூடும். அந்த உணவுக்காக வீட்டில் குழந்தைகள், மனைவிகள், சகோதரர்கள், பெற்றோர் என்போர் பசியோடு காத்திருக்கக் கூடும். அவற்றையெல்லாம் யோசிக்கும் மனநிலையில் அந்தக் குடிமகன்கள் இருக்கப் போவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை அப்போதைய கண்கண்ட தெய்வம் மதுப்போத்தல்கள் தான். அதற்கப்பால் வேறெதுவும் சிந்திக்கும் மனோநிலை அவர்களுக்கு வாய்க்கப்போவதில்லை. அப்படி குடும்பத்தைப் பற்றியும், தன்னை நம்பி பசியோடு காத்திருக்கும் உறவுகள் பற்றியும் சிந்திக்கும் எவருமே மதுபானக் கடைகளை நோக்கி ஓரடி கூட வைத்திருக்க மாட்டார்கள். நேற்று முன் தினம் பல மதுபான சாலைகளில் பல மில்லியன் ரூபாவுக்கு விற்பனை நடந்திருக்கிறதாம்.

இப்படி சமூக இடைவெளியை மறந்து, குடும்பத்தை மறந்து,கொரோனவைக் கூட மறந்து மதுபான சாலைகளுக்கு 'குடிமக்கள்' படையெடுத்தமைக்கு தனியே அவர்கள் மட்டும் காரணமல்ல. மாறாக இத்தகைய நெருக்கடி நிலைக்குள்ளும், மதுபான சாலைகளைத் திறக்க அனுமதி அளித்த அரசே இவ்வாறு மதுபான விற்பனைக்கும், அதனால் எழப்போகும் நெருக்கடிகளுக்கும் முழுப்பொறுப்பு. ஏனெனில் ஊரடங்கை அரசு தளர்த்தியபோது , எவரும் 'மதுபான சாலைகளைத் திறவுங்கள்' என்று கெஞ்சிக் கூத்தாடவில்லை. அவ்வளவு ஏன், அத்தியாவசியமான உணவங்களைக் கூட அரசு திறக்குமாறு தனியே, விசேடமாக அறிவிக்கவில்லை. ஆனால், "மதுபானசாலைகளைத் திறக்க முடியும்" என்று தனியாக ஒரு அறிவித்தலை விடுக்க வேண்டிய எந்தவொரு கட்டாயமும் இல்லாதபோதும், அப்படியான அறிவித்தலை அரசு வெளியிட்டது. அப்படி வெளியிட்டதன் விளைவே நேற்று முன் தினம் மதுபானசாலைகளுக்கு முன்னால் அலைகடலெனக் குடிமக்கள் திரளக் காரணம். இப்படித் திரளாகக் கூடுவதும், சுகாதார விதிமுறைகளை மீறுவதும் கொரோனா பரவ வாய்ப்பாக மாறிவிடுமென்று சிறுபிள்ளைக்கே தெரிந்த விடயம், எல்லாமறிந்த இந்த சர்வ வல்லமை பொருந்திய அரசுக்குத் தெரியாதா? ஒருமாதமாக வீட்டுக்குள் முடக்கப்பட்டவர்களிடம் இறுதியாக எஞ்சியிருக்கும் பணத்தையும் பறிக்க, மதுபானசாலைகள் திறப்பு என்ற தூண்டிலைப் போட எப்படி ஒரு அரசுக்கு மனம் வந்தது? குதிரைகள் ஓடிய பின்னர் லாயத்தை மூடிவது போல, இப்போது தான் விழிப்பு வந்தது போல இனிமேல் மதுபானசாலைகளைத் திறக்க வேண்டாம் என்று ஓங்கிக் கத்துகிறது அரசு. மக்களைக் காக்க வேண்டிய அரசே, இப்படி மதுபானக் கடைகளைத்திறந்து படுகுழிக்குள் தள்ளுவது ஆட்சிபுரிவோருக்கு ஒருபோதும் நல்லதல்ல.



# நீதிமன்ற வழக்கு விசாரணைகள் 24ஆம் திகதிவரை நிறுத்தம்

கொழும்பு, ஏப்.22

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் உள்ள பல நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகள் அனைத்தும் நேற்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமைய சிவில் மேல்முறையீட்டு உயர் நீதிமன்றம், மாகாண உயர் நீதிமன்றம், வணிக உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் தலைமை நீதிவான் நீதிமன்றத்தின் செயல்பாடுகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட இருந்த சந்தேக நபர்களை கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் பத்தொன்பது பெருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அந்த பொலிஸ் பிரிவபாய வலயமாக அறிவிக்கப்பட்டது.

இதனை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வராத அந்த பகுதிகளில் நீதித்துறை நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது குறித்து நீதிச் சேவை ஆணைக் குழுவும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையின்படி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட நீதிபதிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும். நீதிமன்றங்களில் நெரிசலைக் குறைக்கவும், தேவைப்படும் போது மட்டுமே பயனாளிகளை உள்ளீர்த்தல், முகமூடி அணிவதை கட்டாயமாக்கல், உடல் வெப்பநிலையை சரிபார்த்தல், அறிகுறிகளுடன் நீதி மன்றத்திற்குள் ஆள்கள் நுழைவதைத் தடுத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் என அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சலூன்களைப் பூட்டுமாறு அறிவுறுத்தல் வழங்கவில்லை

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து சிகையலங்கார நிலையங்கள் மற்றும் பெண்கள் அழகு நிலையங்கள் என்பவற்றை மறு அறிவித்தல் வரை பூட்டுமாறு சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக இன்று தொடக்கம் அவை மூடப்படும் என்று வவுனியா மாவட்ட அழகக சங்கப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இவற்றை மூடுமாறு எந்தவொரு அறிவுறுத்தலையும் தாம் வழங்கவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உதயனிடம் உறுதிப்படுத்தினார். (ஒ,5)



## விவசாயிகளுக்கு உரம் விநியோகம்

களுத்துறை,ஏப்.22

களுத்துறை மாவட்ட விவசாயிகளுக்கு முதல் தடவையாக நேற்றுமுன்தினம் இலவசமாக உரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருவளை பாதாகொட விவசாய சேவை மத்திய நிலையத்தால் உரம் வழங்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் உள்ள காரணத்தால் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்தவாறு விவசாயிகள் உரத்தை பெற்றுக்கொண்டனர். (ஐ-114)

# சிக்கிய 433 மாணவர்கள் இலங்கை திரும்ப ஏற்பாடு

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து, வெளிநாடுகளில் சிக்கியுள்ள மாணவர்களை அழைத்து வருவதற்காக விசேட விமான சேவை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தியாவின் அமிருதசரசு மற்றும் கோயம்புத்தூரிலும், பாகிஸ்தானின் கராச்சி மற்றும் லாகூரிலும் நேபாளத்தின் காத்மண்டுவிலும் சுமார் 433 மாணவர்கள் சிக்கியுள்ளனர். இவர்களை அழைத்து வருவதற்காக விசேட விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளது என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. இவ்விசேட விமான சேவையானது, வெளிநாடுகளில் சிக்கியுள்ள மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான இலங்கை அரசின் திட்டத்தின் ஒருபகுதியாக வெளிவிவகார அமைச்சின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சீனாவின் வுஹான் நகரில் சிக்கிய மாணவர்களை அழைத்து வருதல் உட்பட யாத்திரிகர்கள் மற்றும் மாணவர்களை அழைத்து வருவதற்காக இதற்கு முன்னரும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸினால் விசேட விமான சேவைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (ப-22,114)

## தேர்தல் திகதி அறிவிப்பு

# கோத்தாவுக்கான பிறந்த நாள் பரிசா?

கொழும்பு, ஏப். 22

ஜனாதிபதியின் பிறந்தநாளை அடிப்படையாகக் கொண்டு பொதுத் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

ஒத்திவைக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தல் ஜூன் 20 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி தேர்தல் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் இரவு வெளியிட்டது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பிறந்தநாளும் ஜூன் 20 ஆம் திகதியே வருகின்றது.

தேர்தல் திகதி அறிவிப்பானது ஜனாதிபதிக்கான பிறந்தநாள் பரிசு என சமூகவலைத் தளங்களில் கருத்துகள் முன்வை க்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் இது தொடர்பில் நேற்று நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கேள்வி எழுப்பப்பட்டது.

இக்கேள்விக்கு சிரித்தபடியே பதிலளித்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, ஜனாதிபதியின் பிறந்தநாளா, அத்தினம் குறித்து நாம் அறிந்து வைக்கவில்லை.

கட்சி, வேட்பாளர்களின் பெயர்கள், விருப்பு இலக்கங்கள் என்பன அறிவிக்கப்பட்டு தேர்தலை நடத்துவதற்கு குறைந்தபட்சம் 35 நாள்கள் இருக்கவேண்டும். கூடினால் 49 நாள்கள். மே 4 ஆம் திகதியளவிலேயே இவற்றை அச்சிடக்கூடியதாக இருக்கும். அன்றிலிருந்து 49 நாள்களை அடிப்படையாகக்கொண்டே தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட்டது - என்றார். (ஒ.5,44)

## தாவடியில் தொற்று நீக்கல்

தாவடி,ஏப்.22

தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொற்று நீக்கல் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார பரிசோதகர்கள், ஆரம்ப சுகாதார நிலைய உத்தியோகஸ்தர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து தொற்று நீக்கல் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் முதலாவதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்றாளி தாவடியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-114)

## நீதிமன்றுக்குள் நுழையத் தடை

சாவகச்சேரி,ஏப்.22

சாவகச்சேரி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்குள், மறு அறிவித்தல் வரை பொதுமக்கள் உள்நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக நீதிமன்றங்கள் மூடப்பட்டிருந்த காலத்தில், தவணையிடப்பட்ட வழக்குகளின் புதிய திகதிகள் பற்றிய விவரங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வழக்குத்திகதி நடைபெறும் திகதி தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும். அதுவரை நீதிமன்ற வளாகத்துக்குள் பொது மக்கள் வருவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## தீ பற்றி எரிந்த வீடு; யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்ப்பாணத்தில், வீடொன்று தீப்பற்றி எரிந்த நிலையில், யாழ்ப்பாண மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவினர், பிரதேச மக்கள் ஒன்றிணைந்து அந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், குருநகர் கொண்டடி வீதியில், இடம்பெற்றது.

குடும்பத் தகராற்றின் காரணமாக, வீட்டுக்குத் தீ வைத்திருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகம் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில், அப்பகுதி கிராம அலுவலர் சென்று நிலமைகளைப் பார்வையிட்டார். பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-106)

## விபத்தில் சிக்கிய இயந்திரப் படகு

### மீனவர்கள் காயம்

அம்பாறை, ஏப்.22

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை ஆழ்கடலில் மீன் பிடிக்குச் சென்ற மீனவர்களின் இயந்திரப்படகு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மீனவர்கள் சிலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆழ்கடல் மீன் பிடியில் ஈடுபட்டு, திரும்பிக் கொண்டிருந்த போது, நேற்று செவ்வாய்க் கிழமை படகு விபத்துக்குளுள்ளானது. இந்தச் சம்பவம் கல்முனை பொலிஸ் பிரிவின் சாய்ந்த மருதுவில் இடம்பெற்றுள்ளது.

பிடிக்கப்பட்ட மீன்களுடன் மாலை 4.30 மணியளவில் கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருந்த போது குறித்த படகு தரையை அண்மித்த நிலையில் படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இயக்கம் நிறுத்தப்பட்டதால் பாரிய அலையினால் படகு தரைக்கு அடித்துச் செல்லப்பட்டது. இதனைக் கவனித்த கல்முனைக்குடி , மாளிகைக்காடு மற்றும் சாய்ந்தமருது பிரதேச மீனவர்கள் விபத்துக்குள்ளான படகில் பயணித்தவர்களைக் காப்பாற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. பாரம் தூக்கி இயந்திரம் வரவழைக்கப்பட்டு குறித்த படகு கரைக்கு இழுத்து வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

## யாழ். மாநகரப் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஏப்.22

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் யாழ். மாநகர பிரதேசத்தில் வட்டார ரீதியாக இடம்பெற்று வருகின்றன.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை முதல் கொரோனா தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை தொடர்பாக அறிவித்தல்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகின்றன. மாநகர சுகாதார பிரிவால் இந்த அறிவித்தல்கள் தினமும் வட்டார ரீதியாக விடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் கட்டாயமாக இந்தச் சுகாதார விதிகளை பின்பற்றி செயற்படுமாறு சுகாதார பிரிவினரால் கேட்கப்பட்டுள்ளது. (ப-17)

## தம்புள்ள சந்தையில் மரக்கறிகள் தாராளம்



தம்புள்ள, ஏப்.22

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு, பெருமளவு மரக்கறிகளும், பழவகைகளும் வந்து சேர்ந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கால் சந்தை மூடப்பட்டிருந்த நிலையில் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இதனால் ஊரடங்கு தளர்த்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து அதிகளவு மரக்கறிகள், பழங்கள் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டன.

இதனால் மரக்கறிகளின் விலைகள் குறைவாகவே காணப்பட்டது. பல மரக்கறிகள் கிலோ 10 ரூபாவிலிருந்து 20 ரூபா வரையும், 20 ரூபாவிலிருந்து 30 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டன. ஒரு கிலோ கரட் 60 ரூபாவுக்கும், லீக்ஸ் ஒரு கிலோ 70 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது. (க-114)

## குடும்ப பட்டியலில் உள்ள ஏனையோருக்கும் ரூ.5000

### அரசு நடவடிக்கை

வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை குடும்ப பட்டியலில் உள்ள ஏனைய குடும்பங்களுக்கும் வழங்க, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் குடும்பங்கள், ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவோர் (ஏப்ரல் மாத வேதனம் கிடைக்காதவர்கள்), 5ஆயிரம் ரூபாக்கும் குறைந்த வருமானம் பெறுவோர், 5 ஆயிரம் ரூபாக்கு குறைந்த தொகையை ஓய்வூதியமாகப் பெறுவோர், இதுவரை 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெறாதவர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. கொடுப்பனவு கிடைக்கப்பெறாதவர்கள் கிராமிய குழுக்களிடம் மேன்முறையீடு செய்தால், குறித்த கொடுப்பனவை இன்றைய தினத்துக்குள் வழங்குமாறு, ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

## கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பிரிவினரால் இந்த மருந்து விசிறும் பணிகள் தொடர்ந்தும் மூன்று நாள்களுக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ-17)

# தேக ஆரோக்கியம் அவரவர் கைகளில்

## மருத்துவர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

கொரோனா தொற்றாளராக ஒருவர் அடையாளம் காணப்பட்டதன் பின்னர், அவர் குணமடைந்து மீளவும் தேக ஆரோக்கியத்துடன் நடமாடுவதென்பது அவர்களின் செயற்பாடுகளின் வாயிலாகவே அமையும் என்று மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொடர்பான பல்வேறு சந்தேகங்களும், கேள்விகளும் பொது மக்களிடையே காணப்படுகிறது. குறிப்பாக கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டதன் பின்னர் ஒருவர் அதிலிருந்து முழுமையாக குணமடைவதற்கான காலம் எவ்வளவு என்பது தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன. இது தொடர்பில் மருத்துவர்கள் வெளியிட்டுள்ள தகவல்களிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் ஒருவர் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை பொறுத்தே அதிலிருந்து குணமடைய எவ்வளவு காலம் ஆகும் என்பதைக் கூறமுடியும். சிலர் இந்த நோயிலிருந்து விரைவில் மீண்டுவிடுவார்கள். மற்ற சிலருக்கு இது நீண்டகாலப் பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும். அதேபோன்று, வயது.பாலினம் மற்றும் ஒருவரது உடல்நலப் பிரச்சனைகளையும் சார்ந்ததாகும். எந்தளவிற்கு எவ்வளவு காலம் இதற்கான சிகிச்சையை எடுத்துக் கொள்கிறார்களோ, அதையும் பொறுத்தே ஒருவர் எப்போது குணமடைவார் என்பதைக் கணிப்பிட முடியும்.

இதேவேளை ஒருவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டால் பெரும்பாலானவர்களுக்கு இரண்டு முக்கிய அறிகுறிகளே தென்படும். ஒன்று இருமல். மற்றொன்று காய்ச்சல். ஆனால் சிலருக்கு இந்த அறிகுறிகளோடு, உடல் வலி, உடல் சோர்வு, தலைவலி மற்றும் தொண்டைவலி ஆகியவையும் தென்படும். ஆரம்பத்தில் வறட்டு இருமலே இருந்தாலும், போகப்போக சிலருக்கு சளி வரத்தொடங்கும்.

சராசரியாக இரண்டு வாரங்களுக்குள் இத்தொற்றிலிருந்து மீண்டுவிடுவார்கள் எனச் சீன தரவுகளை ஆராய்ந்த உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. எவ்வாறாயினும் கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் பொது மருத்துவமனைகளை நாடி இது தொடர்பான் மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்வது பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமூகத்திற்கும் பாதுகாப்பானதாக அமையும் என்றனர். (ப)

## வரி செலுத்துவோருக்கு சிறப்புச் சலுகைத் திட்டம்

### உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு வரி செலுத்துவோர் மற்றும் நிறுவனங்களுக்குச் சிறப்புச் சலுகைகளை வழங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

'வற்'வரி செலுத்துகை தொடர்பாக பெப்ரவரி மாதம் நிறுவனங்கள் சேகரித்த தொகையை, வற் வரியை மார்ச் 20 ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டும். எனினும், ஊரடங்கு மற்றும் கொரோனா வைரஸ் காரணமாக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. எனவே மார்ச் 20 ஆம் திகதிக்குப் பதிலாக ஏப்ரல் 30ஆம் திகதி வரை கட்டணம் செலுத்த அரசு தீர்மானித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் நாதுன் குருகே தெரிவித்தார்.

இருப்பினும், நிறுவனம் தொடர்பான விவரங்களைக் கணக்கிட அதிகாரிகளுக்கு சிறிது நேரகால அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரி செலுத்துவோர் வங்கிகளுக்குச் செல்லாது வீட்டிலிருந்தே ஒன்லைன் மூலம் தனது வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு மாற்ற முடியும் என்றும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (த)



## மருந்து உற்பத்தியை அதிகரிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஏப். 22

பெரசிடமோல், சுவாச நோய்களுக்கான நோய் எதிர்ப்பு மருந்துகள், உயர் குருதி அழுத்தம், நீரிழிவு மற்றும் கொலஸ்ட்ரோல் போன்ற தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகளின் உற்பத்தியை அதிகரிப்பதனூடாக தற்பொழுதுள்ள தொற்றுநோயால் ஏற்படும் ஏனைய சிக்கல்களைத் தீர்க்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கும் தொற்று பரவுவதைத் தடுக்கவும் ஜனாதிபதி தலைமையின் கீழ் மற்றும் சுகாதார அமைச்சரின் வழிநடத்தலின் கீழ் அரசு பல்வேறு சுகாதார பாதுகாப்பு முறைகளை முன்னெடுத்து வருகிறது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக உற்பத்தி செய்யப்படும் பெரசிடமோல் 500மில்லிகிராம் (pacidol) மருந்து உற்பத்தி அளவையும் சுவாச நோய்க்கு வழங்கும் நோய் எதிர்ப்பு மருந்துகளினதும் உற்பத்தி அளவையும் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக தொற்று நோயை கட்டுப்படுத்தவும் அதற்காக நேரடி பங்களிப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் குருதி அழுத்தம், நீரிழிவு மற்றும் கொலஸ்ட்ரோல் போன்ற தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகளின் உற்பத்தியை அதிகரிப்பதனூடாக தற்போதுள்ள தொற்றுநோயால் ஏற்படும் ஏனைய சிக்கல்களைத் தீர்க்க தொடர்ச்சியாக அவை விநியோகிக்கப்படுகின்றன் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. ரத்மலானையிலுள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்குச் சென்ற சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆரச்சி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன பணிகளை ஆராய்ந்தார். நாட்டின் மொத்த மருந்து தேவையில் 20 வீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனை 60 முதல் 75 வீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## ஈஸ்டர் தாக்குதல்: உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க வேண்டும் அரசு!

### ரிஷாத் வலியுறுத்து

கொழும்பு, 22



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தனது ருவிட்டர் வலைத் தளத்திலேயே ரிஷாத் பதியுதீன் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

"அரசியல்வாதிக்காக அப்பாவி நபர்களைக் குற்றவாளியாக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாம்.பாதிக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவனான தான், பயங்கரவாதத் தாக்குதலால் படும் வேதனையை நன்கு அறிவேன். ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் நான் பிரார்த்தனைசெய்கிறேன்" என்றும் அவர் பதிவிட்டுள்ளார். (அ-22)

## அரச ஊழியர் நிதியில் உலர் உணவு பொதிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தொடர் ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட, நலிவுற்ற குடும்பங்களுக்கு உலர்உணவுப் பொதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியைப் பயன்படுத்தி நிவாரணப் பொதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும், நலிவுற்ற நிலையில் வசித்து வரும் பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இந்தப் பொதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(க-121)

## அனலைதீவுச் சங்கத்தில் பொருள்கள் கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஏப்.22


அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு மாதத்துக்குத் தேவையான பொருள்கள் கையிருப்பில் உள்ளன் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேசத்தில் உள்ள 650 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான பொருள்கள் யாவும், கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், சங்கத்துக்குத் தேவையான பொருள்களை அனுப்பி வைத்துள்ளது. (க-17)



—Child with post-malarial oedema. —Malaria treatment centre at a Government dispensary.



# இலங்கையை ஆட்டிப்படைத்த மலேரியா!


## உயிரிழப்பு 1.25 லட்சம்: பாதிப்பு 15 லட்சம்!

■ எம்.ஐ.முபாறக்

தொற்று நோய்கள் எமது நாட்டுக்கு புதியவை அல்ல .பல தடவைகள். பல்வேறு பெயர்களில் அவற்றை எதிர் கொண்டிருக்கிறது எமது நாடு. ஸ்பெயின் வைரஸ்... அதன் தாக்கம்... அதனால் ஏற்பட்ட உயிழப்பு... பலியானோரின் எண்ணிக்கை... இப்படி எல்லா வற்றையும் பார்த்தோம் கடந்த வாரம். இப்போது பார்க்கப்போவது மற்றுமொரு தொற்று நோய்.86 வருடங்களுக்கு முன் நாட்டைப் புரட்டிப் போட்ட நோய் அது. இன்று இலங்கையில் முற்றாக ஒழித்துக்கட்டப்பட் நோய் அது. அது தான் மலேரியா. அது எமக்கு ஏற்படுத்திய பேரழிவு லேசுப்பட்டதல்ல.திடீர் திடீரென வரும்.கொத்துக் கொத்தாக உயிர்களைீ பறிக்கும். ஓய்ந்துவிடும். அதில் இருந்து இப்போதுதான் எமக்கு ஓரளவு நிம்மதி. மலேரியா பல தடவைகள் எம்மைத் தாக்கி யுள்ளது.அதில் ஒரு தடவை தாக்கியதை அதனால் ஏற்பட்ட அவலத்தைப் பார்ப்போம் இங்கு. 1934 இன் இறுதிப் பகுதி அது. பிரிட்டிஷ் ஆட்சி.

பெரும் வறட்சி ஏற்படுகிறது. அதனைத் தொடர்ந்து ஒக்டோபரில்... பெருவெள்ளம்.மலேரியாவின் பரவலுக்கு அந்த வெள்ளமே காரணம். நவம்பரில் மலேரியா தலைதூக்குகிறது. கேகாலை மாவட்டம்தான் அதன் பிறப்பிடம்.

வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமான இறப்பர், தேயிலைத் தோட்டங்களில் இருந்த லயன் வீடுகளில் இருந்தே பெருக்கெடுக்கின்றன மலேரியா நுளம்புகள்..வெள்ளைத்தைத் தொடர்ந்து தேங்கிய நீர், சுத்தமற்ற லயன் வீட்டுச் சூழல்கள்.இவையே நுளம்பு பரவலுக்குக் காரணம். மலேரியா மிக வேகமாகப் புரட்டிப் போடுகிறது கேகாலையை. டிசம்பரில் மாத்திரம் 3ஆயிரத்து 27 பேர் பலி. அதில் 2 ஆயிரத்து 800 பேர் குழந்தைகள்.




1935 ஜனவரியில் மேலும் உக்கிரம். முதல் இரண்டு வாரங்களில் 1976 பேர் பலி. அவர்களுள் 1470 பேர் குழந்தைகள். அந்த மாவட்டத்தில் ஒன்றரை மாதத்தில் மாத்திரம் 3500 குழந்தைகளின் உயிர்களை காவுகொள்கிறது இந்த மலேரியா. அதனைத் தொடர்ந்து அங்கிருந்து கண்டி, கொழும்புக்கு.... இப்படி நாட்டின் பல இடங்களுக்கும் தாவுகின்றன இந்த நுளம்புகள்.

கண்டியின் நிலைமைதான் மிகப் பரிதாபம். ஒவ்வொரு வீட்டிலும் காய்ச்சல். வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் காய்ச்சல்.ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் அல்லது இருவர் பலி. மரணித்தவர்களைப் புதைக்க முடியவில்லை. புதைகுழியைத் தோண்டுவதற்கு இயலவில்லை.

காரணம்?

எல்லோருக்கும் காய்ச்சல்.குழியைத் தோண்டுவதற்குத் தெம்பில்லை. மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்கும் வழியில்லை.எல்லோரும் படுக்கையில். அடுப்பெரிந்து நீண்ட நாட்கள். எழுந்து நிற்க வழியில்லை. யார் போய்ச் சமைப்பது?

வறுமையும் ஒருபுறம். அடுப்பங்கரை காய்வதற்கு இதுவும் ஒரு காரணம். உணவும் தட்டுப்பாடு. மருந்தும் தட்டுப்பாடு. உணவு வழங்கவும் ஆளில்லை. மருந்து வழங்கவும் ஆளில்லை. மரணித்தது காய்ச்சலாலா அல்லது பசியாலா?இப்படிக் கேட்கும் அளவுக்கு நிலைமை உக்கிரம். வைத்தியத் துறையோ கடும் அலட்சியம். மலேரியா உக்கிரமடைய இதுவே பிரதான காரணம்.

வைத்தியர்கள் முதலில் செய்தது என்ன தெரியுமா? இந்த நோய் பற்றிய செய்தியை மூடி மறைத்ததுதான்.செய்திகளை ஊடகங்களுக்கு வழங்குவதில்லை என உத்தியோகபூர்வமாக முடிவெடுத்தது கொழும்பு பொது வைத்தியசாலை. அந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நோயாளிகளுள் மூன்றில் இரண்டு மடங்குபேர் மலேரியா நோயாளிகள். இதனால் தடுமாறுகிறார்கள் வைத்தியர்கள். முற்றாக மூடி மறைக்கிறார்கள் அவர்கள். அப்போதைய இலங்கை ஆளுநர் சிறிமத் ரெஜினோல்ட் எட்வார்ட் ஸ்டப்ஸிற்கு இந்தச் செய்தி தாமதமாகவே சென்றடைகிறது.

ஆளுநருக்கோ கடும் ஆத்திரம். வைத்தியர்களின் இந்தத் தீர்மானத்தை விமர்சிக்கிறார்.பாதிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்வதற்குத் தயாராகிறார் ஆளுநர். வைத்தியர்களோ அதற்கும் முட்டுக்கட்டை. வந்தால் தங்களுக்கும் மலேரியா தொற்றும் என்று எச்சரிக்கிறார்கள். ஆளுநர் எதையும் பொருட் படுத்தவில்லை. களத்தில் இறங்கிவிட்டார். ஆக வேண்டிய காரியங்கள் அனைத்தையும் களத்தில் நின்று கவனிக்கிறார்.

மலேரியாவைக் கட்டுப்படுத்த முதலிலேயே முன்னுக்கு வந்தது இராணுவம் தான்.அதையும் விரும்பவில்லை வைத்தியர்கள் . ஆளுநரோ இப்போது களமிறக்குகிறார் இராணுவத்தை.

மறுபுறம் களமிறங்குகிறது இளைஞர் அணி ஒன்று.பின்நாளில் பிர பல்யமாகப் பேசப்பட்ட இடதுசாரி அரசியல்வாதிகள் அவர்கள். என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா.பிலிப் குணவர்தன, றொபேர்ட் குண வர்தன. இப்படியொரு பட்டாளம். இவர்களின் பங்களிப்பு மிகப் பெரியது. மலேரியாவைக் கட்டுப்படுத்துதல்பசியைப் போக்குதல், இந்த இரு நோக்கோடும் அதற்கான பொருட்களோடும் இந்த இளைஞர்கள் களமி றங்குகிறார்கள்

மருந்துகள், உணவுகள் வீடுகள் தோறும் விநியோகம். என்.எம்.பெரேராவின் தோள்களில் பருப்பு மூட்டைகள். ஒவ்வொரு வீடாக விநியோகம்.

இதனால் அவருக்கு பட்டப் பெயர் "பருப்பு மஹாத்தயா" என்றானது.Mr Dhal என அழைத்தார்கள் வெள்ளையர்கள்.

கண்டியில் உள்ள அவலம் கண்டு எல்லோருமே கலங்கி நின்றார்கள் .முடியுமான அளவு உதவினார்கள்.1936 ஆம் ஆண்டு தேர்தலில் இவர்கள் வெற்றி பெறுவதற்கும் இந்த நிவாரணப் பணியே காரணம்.இவ்வாறு முழு நாட்டையும் சுற்றி வந்தது இந்த மலேரியா. 7 மாதங்களில் 1 லட்சத்து 25 ஆயிரம் பேர் பலி.80 ஆயிரம் என்கிறது இன்னொரு தகவல். அப்போதைய சனத்தொகை 55 லட்சம்.மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்கள் 15 லட்சம்.

இறுதியாக ஆயுள்வேத வைத்தியமே முற்றுப்புள்ளி வைத்தது இந்த நோய்க்கு. இதனையடுத்து ஆயுள்வேத வைத்தியசாலைகள் நாட்டின் பல இடங்களில் நிறுவப்பட்டன . 1935 ஜுலையில் முடிவுக்கு வருகிறது மலேரியா. மலேரியா முற்றாக ஒழிக்கப்பட்ட நாடாக இப்போது எம் நாடு.மிக்க மகிழ்ச்சி....

அதைப்போல்.. கொரோனாவும் முற்றாக ஒழிவதற்குப் பிராத்திப்போம்...அதற்கு ஏற்ப செயற்படுவோம். ■

# வெளிமாவட்டத்தவர்கள் செல்வதற்கு ஒழுங்குகள்

## மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22


யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பரிந்துரையுடன் தமது சொந்த மாவட்டங்களுக்குச் செல்வதற்கு நேற்றுத் தொடக்கம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் மாவட்டத்துக்கு இடையிலான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. புத்தளம், கம்பஹா, களுத்துறை, கொழும்பு ஆகிய 4 மாவட்டங்களுக்கும் செல்ல முடியாது. ஏனைய மாவட்டங்களுக்கு அத்தியாவசிய சேவையினர் மற்றும் தொழில் நடவடிக்கைகயில் ஈடுபடுவோர் மாத்திரம் செல்ல முடியும். தொழில் அடையாள அட்டையைக் காண்பித்தே அவர்கள் செல்ல முடியும்.

சுகாதாரத் துறையினர், பாதுகாப்புத் தரப்பினர், நிர்வாகத் தரப்பினர் என்று மூன்று தரப்பினரும் இணைந்தே இதனைச் செயற்படுத்துகின்றனர். மாவட்டச் செயலகத்தின் பரிந்துரையுடன் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் செல்வதற்கான ஏற்பாடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. சொந்த வாகனத்திலேயே செல்ல வேண்டும். வாடகைக்கு வாகனத்தைச் செலுத்துபவரும் சுகாதார மருத்துவ அதிகாரியின் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும், என்றார்.

(ஒ.5,105)



# காரைநகரில் சிறுதானியத்தை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.22

காரைநகரில் சிறுதானியச் செய்கையில் ஈடுப்பட்ட விவசாயிகளின் வயலில் புகுந்த கால்நடைகள் அவற்றை சேதப்படுத்தியிருந்ததான விவசாயிகளின் முறைப்பாட்டை அடுத்து விவசாய உத்தியோகத்தர்கள் குறித்த வயல்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

காரைநகர் பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த வயல்களைப் பார்வையிட்டு, கால்நடை உரிமையாளர்களிடம் இருந்து அதற்கான நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

வயல்களில் செய்கை பண்ணப்பட்டிருந்த எள், பயறு போன்ற சிறுதானியங்களை கட்டாக்காலி கால்நடைகள் சேதப்படுத்தியிருந்தமைகள விஜயத்தின்போது உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு சேதப்படுத்திய 7 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. கொரோனா நோயானது ஒவ்வொரு நபரையும் சுய பொருளாதார மேம்பாட்டில் ஈடுபடுவதற்கு கற்றுத்தந்துள்ள நிலையில், அரசாங்கமும் விவசாய அதிகாரிகளும் வீட்டுத்தோட்டம் உள்ளிட்ட விவசாய செய்கையை ஊக்குவித்து வருகின்றனர். இதற்காக கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ஐ)

# வாகன அனுமதிப்பத்திர செயற்பாடு வழமைக்கு

தெல்லிப்பழை,ஏப்.22

வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் வழமைக்குத் திரும்பியுள்ளன.

அதனால் வாகனவரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவரும் பொதுமக்கள், கொரோனா தொடர்பில் அரசாங்கம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, சுகாதாரத்துறையினர் வழங்கிய அறிவுறுத்தல்களை மிகக் கவனமாகப் பின்பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எவ்வித கட்டணங்களும் இல்லாமல் அரசாங்க தகவல்களை விரைவாக உங்கள் தொலைபேசிகளில் பெற்றுக் கொள்ள

F DSTellipalai என டைப் செய்து, 40404 என்ற இலக்கத்துக்குகுறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலகத்தின் முகநூலில் பதிவிடப்பட்டுள்ளது.

(க)

# 60 போத்தல் கசிப்புடன் உசனில் ஒருவர் கைது

கொடிகாமம், ஏப்.22

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உசன் பகுதியில் உள்ள சிறிய காட்டுப் பகுதியில் 60 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து நேற்று முன்தினம்திங்கட்கிழமை குறித்த இடம் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. இதன்போது 60 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளையும் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ப-159)

# யாழ். பாடசாலை ஒன்றில் ஊரடங்களில் கைவரிசை

யாழ்ப்பாணம், ஏப்.22

ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் புகுந்த திருடர்கள், அங்கிருந்த இலத்திரனியல் சாதனங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின் விசிறிகள், நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் மின் ஏறியி ஆகியன திருடப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளளது. ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் நேற்று காலை பாடசாலைக்குச் சென்ற அதிபர் குறித்த சம்பவம் தொடர்பில் அவதானித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

(ப-222)

# கொரோனா தொற்றை தடுக்க நடவடிக்கைகள்

## பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கொரோனோ தொற்றைத் தடுப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு, பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற வேண்டிய மாதாந்த கூட்டம் தொடர் ஊரடங்குச் சட்டத்தால், நடத்த முடியாமல் போனது அந்த மாதத்துக்கான கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பிரதே சசபை மண்டபத்தில், தவிசாளர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆராயப்பட்டன. சபை எல்லைக்குட்பட்ட பஸ் தரிப்பிடங்கள், சந்தைகள், பொது இடங்கள் ஏனைய அரச திணைக்களங்கள் என்பவற்றுக்கு தொற்று நீக்கி தெளிக்கப்பட்டது. ஊரடங்கு வேளையிலும் குடி தண்ணீர் வழங்கியும் , குப்பை கூழங்களை அப்புறப்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

மருதங்கேணிப் பொதுச்சந்தை வளாகத்திலுள்ள கடைத்தொகுதியைப் புனரமைப்புச் செய்வதற்கு மத்திய அரசிடம் இருந்து 2 மில்லியன் ருபா நிதி கோரப்புட்டுள்ளது.

தற்பேதைய சூழலில் அந்நிதி கிடைக்காத பட்சத்தில் வேறு ஒரு நிதியிலிருந்து பெற்று புனரமைப்புச் செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலோலி உப அலுலகம் இன்பறுட்டி வீதி, உடுத்துறை பாரதி முன்பள்ளி வீதி ஆகியவற்றைப் புனரமைப்பு செய்ய வடக்கு மாகாண சபையிடம் நிதி கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை ஏப்ரல் மாதாந்தக் கூட்டத்தை எதிர்வரும் 30 ஆம் திகதி கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

(க-173)

கூட்டுறவுப்பணியாளருக்கும்

# 5,000 ரூபா வேண்டும்

## ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.22

வடக்கு மாகாணத்தில் குறைந்த வேதனத்தில் பணிபுரியும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் ஐயாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் மனு ஒன்றையும் கையளித்தது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பெரும் பகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கான நிவாரணப் பொருள்களை அரசாங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இவை வடக்கு மாகாணத்தில் மிகக் குறைந்த மாதச் சம்பளத்தில் பணிபுரியும் கூட்டுறவு பணியாளர்களுக்கு வழங்கப்படவில்லை. போதிய வருமானமின்றி அநேகமான கூட்டுறவுப் பணியாளர்களின் குடும்பங்கள் தற்போதைய சூழ்நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக இந்த கொடுப்பனவை வழங்கி உதவுங்கள் - என்றுள்ளது.

(ஜ-17)

# நிவாரணங்களுக்கு உரிமைகோரும் அங்கஜனுக்கு எதிராக நடவடிக்கை

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 22

அரச நிவாரணங்களுக்கு உரிமை கோரும் வேட்பாளர் இராமநாதன் அங்கஜனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்ததுணைத்தலைவர்சி.வி.கே.சிவஞானம், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டச் செயலருமான கணபதிப்பிள்ளை மகேசனுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு 2020ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதி குறிக்கப்பட்டநிலையில்கொரோனாவைரஸ்தொற்றுநோய்த் தாக்கத்தை யாவரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

நாடுமுழுவதும்ஊரடங்குநடைமுறையிலிருப்பதனால் பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ள அரசுத்துறை, அரசுசாரா ஊழியர் மற்றும் சமுர்த்தி உதவி பெறுவோர், சமுர்த்தி பெறுவதற்கு பட்டியலிலுள்ளோர், சமுர்த்திஉதவித்திட்டத்தில்வராதோர், கூலித் தொழிலாளர், தொழில் அற்றோர், வாழ்வாதார மற்றோர், கடல் தொழிலாளர், விவசாயிகள், மேலும்போரினால்பாதிக்கப்பட்டோர், பலதுறைகளிலும் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணங்களை அரசு அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடனாகவும், நிவாரண உதவியாகவும் 5 ஆயிரம் ரூபா உதவி வழங்குவதற்கு அரசு அறிவித்தல் கொடுத்துள்ளது.

இந்தப்பணிகளைநிறைவேற்றவேண்டியகடப்பாடுடையவர்கள்மாவட்டச்செயலர், பிரதேசசெயலர்கள், கிராம சேவையாளர்கள், கடமைப்பொறுப்புள்ள ஏனைய அரசுத்துறைத் தலைவர்கள் மட்டுமே தான். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு கட்சியின் வேட்பாளராயுள்ள இ. அங்கஜன் தனது முகநூலில் தனது அமைப்பாளர்கள், முகவர்களின்பெயர்களையும், அவர்களின் தொலைபேசி இலக்கங்களையும் அறிவித்து அரசு வழங்கும்நிவாரணம், நிதிஉதவிஎன்பனவற்றைப்பெறுவதற்கு பொதுமக்கள் குறிப்பிட்ட தனது முகவர்களைத் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெறுமாறு அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் செய்திகள் சமூகத் தளங்களிலும், பத்திரிகையிலும்வெளிவந்துள்ளன. இந்தச்செயலானது ஆளுந்தரப்பினதும், வேட்பாளர் அங்கஜனினதும் தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்த எடுத்த நடவடிக்கையேயாகும். இந் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத்தினதும் மாவட்டங்களின்தேர்தல்தெரிவித்தாட்சிஅலுவலர்களினதுமாகும். என்றுள்ளது. (ஓ,5)

# பொலிஸாருக்கு எதிராக விசாரணை

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஏப். 22

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும், யாழ்ப்பாணப் பிரிவு மூத்த பொலிஸ்மா அத்தியட்சகரிடமும் விசாரணை அறிக்கைகளைக் கோரியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப்பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் இது தொடர்பான கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலிப்பகுதியில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த 6 பொலிஸார் வீட்டில் இருந்த குடும்பத் தலைவரை சரமாரியாகத் தாக்கினர் எனச் செய்திகள் வெளியாகி இருந்தன. சமூக ஊடகங்களிலும், ஊடகங்களில் அறியக்கூடியதாக இருந்தது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாணப்பிரிவு மூத்த பொலிஸ்மா அத்தியட்சகர் ஆகியோர் நடவடிக்கை எடுப்பதுடன், தங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் விரிவான அறிக்கை அனுப்பி வைக்குமாறும் பிராந்திய இணைப்பாளர் கோரியுள்ளார். (ஓ,5)

## மரண அறிவித்தல்



நல்லதுரை மோகனராசா (மோகன்)
(நீராவியடி சைக்கிள் கடை)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி ஆனைப்பந்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நல்லதுரை மோகனராசா நேற்று (21.04.2020) காலமானார். அன்னார் சுரேந்திர தேவியின் அன்புக் கணவரும் கலைப்பிரியா (பிரியா), சதுர்த்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். இறுதிக் கிரியைகள் இன்று (22.04.2020) நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்று கோப்பாயின் மனல்மயாணத்தில்பூதவுடல்தகனம்செய்யப்படும்.

நாவலர் வீதி, ஆனைப்பந்தி. தகவல், குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

கடந்த (07.04.2020) செவ்வாய்க்கிழமை காலமான

**அமரர் பத்மநாதன் இரவிச்சந்திரன்**

சாவகச்சேரி ரவி விற்பனை நிலையம் - S.K பாம் உரிமையாளர்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் உறுப்பினரும்.
முன்னாள் செயலாளரும் **திருமதி இ.யமுனாவதி** யமுனா ஸ்ரேரர்ஸ் உரிமையாளரின் அன்புக் கணவரும் ஆவார்.
அன்னாரின் மறைவுக்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

# ஓட்டோவில் வந்தோர் வீட்டின் மீது கல்வீச்சு

## சங்கத்தானையில் சம்பவம்

சாவகச்சேரி, ஏப். 22

ஓட்டோ ஒன்றில் வந்த சிலர் வீட்டின் மீது கற்களை வீசித் தாக்குதல் மேற்கொண்டு தப்பிச் சென்ற சம்பவம் சாவகச்சேரி சங்கத்தானையில்கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

திருட்டு நோக்குடன் வந்த அவர்கள் வீட்டுக்காரர்விழித்துக்கொண்டதையடுத்துக் கற்களை வீசி விட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் கோழிப் பண்ணை நடத்துபவரின் வீட்டுப் பக்கமாக முச்சக்கர வண்டிஒன்றுபயணித்துள்ளது.

அந்த ஓட்டோ சத்தம் கேட்டு வீட்டுக்காரர் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டதால், ஓட்டோவில் வந்தவர்கள்தாம்கொண்டு வந்தகற்களைவீட்டின் மீது வீசி தாக்குதல் மேற்கொண்டு தப்பித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சம்பவம்தொடர்பில் மேலதிக விசாரணைகளைசாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-9)

# 34 ஆயிரத்து 500 பேர் ஒரு மாதத்தில் கைது

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளநிலையில், ஊரடங்கை மீறினர் என்ற குற்றச்சாட்டில் 34 ஆயிரத்து 500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 8 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

"கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், வரக்காப்பொல, அலவத்துகொட மற்றும் அக்கறைப்பற்று ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குத்தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளுக்குத் தளர்த்தப்பட்டுள்ளது. ஊரடங்கு வார நாள்களில் இரவு 8 மணிமுதல் காலை 5 மணிவரை நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

மக்கள் தங்கள் அத்தியாவசியதேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், அரசநிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவுமே இந்த ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

அத்தியாவசியதேவை இன்றி முறையற்று செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவும். என்றார். (த-22)

# யாழ். வந்தன தபால் பொதிகள்




யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணத்துக்கு 6 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

கொழும்பில் இருந்து வாகனம் மூலம் வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்ட தபால் பொதிகளே இவ்வாறு யாழ்ப்பாணபிரதமதபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை கொண்டு வரப்பட்ட இந்த தபால்பொதிகள் இன்றுதரம் பிரிக்கப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்ததபால்பொதிகளில்கூடுதலாக மருந்துப் பொதிகளே காணப்பட்டனஎன்றுதபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-17)

### மிருசுவில் கொலைக்குற்றவாளிக்கு மன்னிப்பு:

# கோத்தாவின் முடிவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்!

கொழும்பு, ஏப். 22

தென்மராட்சி, மிருசுவில்பகுதியில் 8 அப்பாவித் தமிழர்களைக் கொடூரமாகப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டமுன்னாள்இராணுவச் சார்ஜன்ட் ஆர்.எம். சுனில் ரத்நாயக்காவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மன்னிப்பின் கீழ் விடுதலைசெய்தமையைஆட்சேபித்து மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில்தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் நேற்றுமுன்தினம் பகல் சட்டத்தரணிகேசவன்சயந்தன் உயர்நீதிமன்றத்தில் efiling மூலம் வழக்குத் தாக்கல் செய்தார்.

அதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை அம்பிகா சற்குணநாதன் தானும் ஒரு மனுதராக ஒரு வழக்கைத் தாக்கல்செய்துள்ளார்.

அம்பிகா சற்குணநாதன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறுப்பினராகஇருந்தபோது சிறைக் கைதிகளின் விடுதலை, ஒழுங்குகள் பற்றிய விடயங்களைக் கையாண்டவர். அந்தவகையில் இந்த விடயங்களில்ஆழ்ந்தபாண்டித்தியம் பெற்றவர் என்ற முறையில் இந்த விடயத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அதேவேளை, மாற்றுக் கொள்கைகளுக்கானமையமும் ஒரு வழக்கை நேற்று முற்பகல் தாக்கல் செய்துள்ளது.

இந்த இருவரினதும் வழக்கைபாவேந்திராசட்டநிறுவனம் மன்றில் தாக்கல் செய்துள்ளது. (த-22)

# கொவிட் - 19 நிதியத்துக்கு மேலும் 32 மில்லியன் ரூபா

## வைப்பு மீதி 769 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.22

**கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு மேலதிகமாக 32 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம், நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி தற்போது 769 மில்லியனாக அதிகரித்துள்ளது.**

சிங்கப்பூர் தலைமைச் சங்கநாயக்கர் சங்கைக்குரிய பெல்லன்வில தம்மரத்ன தேரர் 05 மில்லியன் ரூபாவும், வட அமெரிக்காவின் தலைமை சங்கநாயக்கர் சங்கைக்குரிய மஹரகம தம்மசிறி தேரர் 05 மில்லியன் ரூபாவும், பிரான்சின் தலைமை சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய பரவாஹெர சந்திரரத்ன தேரர் ஒரு மில்லியன் ரூபாவும் சுவி ட்சர்லாந்தின் ஜெனீவா சர்வதேச பௌத்த விகாராதிபதி கலாநிதி சங்கைக்குரிய தவளம தம்மிக தேரர் மற்றும் சங்கைக்குரிய ஹல்விடிகல சுஜாத தேரர் ஒரு மில்லியன் ரூபாவும், கல்கிஸ்ஸை பௌத்த நிலையத்தின் தலைவர் கலாநிதி சங்கைக்குரிய திவியகஹ யஸஸ்ஸி தேரர் ஒரு மில்லியன் ரூபாவும் இத்தாலியின் சிரென்சி சமாதி விஹாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய தொம்பதெனியே நந்தசிறி தேரர் 02லட்சம் ரூபாவும் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தனர்.

அவர்களுடன், சீ.ஜே. விக்ரமரத்ன 05 மில்லியன் ரூபாவும், மெரைன்வன் தனியார் நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவும், மரீனா பூட்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் இலங்கை இருதய சங்கம் தலா 05 மில்லியன் ரூபாவும், வீதிப் போக்குவரத்து அதிகார சபை 05லட்சம் ரூபாவும், ஏ. அமரசிங்க ஒரு லட்சம் ரூபாவும், பீ.டீ. தர்மவர்தன ஐம்பதாயிரம் ரூபாவும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

இலங்கைவங்கியின்நிறுவனக்கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய கொவிட் 19 சுகாதார, சமூகபாதுகாப்பு நிதி யத்துக்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொருவருக்கும் அன்பளிப்புகளை அல்லது நேரடி வைப்பு களைச் செய்ய முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்துக்குச் செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியினை வைப்பிலிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்து. (ப)

# செயற்கைக் கடற்கரை அமைக்கும் பணி தீவிரம்

கொழும்பு, ஏப்.22

களுத்துறை கெலிடோ கடற்கரை மற்றும் கல்கிசை கடற்கரைக்கு இடைப்பட்ட கரையோரப் பிரதேசத்தில் செயற்கைக் கடற்கரையை அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன என்று கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

குறித்த திட்டம் நடைமுறைக்கு வரும் பகுதிகளில் கடும் பாதுகாப்பு அமுல்ப் படுத்தப்படும். வெளிநாட்டு நிறுவனம் ஒன்று உள்நாட்டுநிறுவனம் ஒன்றுடன் இணைந்து இந் நடவடிக்கைகளை தொடர்கிறது. இந்த செயற்கைக் கடற்கரைத் திட்டம் தொடர்பில் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. திட்டம் நிறைவடைந்ததும் பிரதேசத்தின் மீன் பிடி மற்றும் சுற்றுலாத் துறை சார் நடவடிக்கைகள் விருத்தி அடையும். திட்டத்தின் முதல் கட்டமாக 2 கிலோ மீற்றர் நீளம் மற்றும் 25 மீற்றர் அகலம் கொண்ட செயற்கை கடற்கரை உருவாக்கப்படவுள்ளதுடன் இதற்காக 3 இலட்சம் கன மீற்றர் மணல் பயன்படுத்தப்படவுள்ளது. இதற்காக சுமார் 890 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

செயற்கை கடற்கரையை உருவாக்குவதற்கு தேவையான மணல் இரத்மலானை பகுதி கடலில் இருந்தே எடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் ஊடாக கல்கிசைக்கு 500 மீற்றர் செயற்கை கடற்கரையும், இரத்மலானைக்கு 1.5 கிலோமீற்றர் செயற்கை கடற்கரையும், களுத்துறைக்கு 2 கிலோ மீற்றர் செயற்கை கடற்கரையும் உரிமையாகவுள்ளது.

தற்போதும் இந் நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில், கடந்த மாதம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வேலைகளை மேற்பார்வை செய்துள்ளார் என்று கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்ரகீர்த்தி தெரிவித்தார்." (ப)

# போற்றப்பட வேண்டியோர் துப்புரவுத் தொழிலாளர்கள்

## சாவ. தவிசாளர் தெரிவிப்பு

கொடிகாமம், ஏப்.22

துப்புரவுத் தொழிலாளர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். கொரோனா அச்சத்திலும் அவர்களுடைய சேவை அளப்பரியதாகக் காணப்பட்டது என்று சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் சபை அமர்வு பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் துன்ப துயரங்களுக்கு உட்பட்டிருந்தாலும் கூட யாழில் பாரிய இழப்பு எதனையும் நாம் சந்திக்கவில்லை. இறைவனுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இந்த அரசு ,சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள், துப்பரவுத் தொழிலாளிகள் மிகவும் நல்ல முறையில் கடமையாற்றியதால் அபாயம் நம்மை விட்டு நீங்கி உள்ளது.

உலகத்திலே வைத்திய சேவையில் சிறப்பான நாடு ஜேர்மன் அவ்வாறான சர்வதேச நாடுகளில் கொரோனாத் தொற்று தாக்கத்தைச் செலுத்தி இருந்தாலும் எமது நாட்டை பொறுத்தவரை தாக்கம் குறை வாக உள்ளது. இதற்கு அனைவரும் நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

ஊரடங்கை தளர்த்த வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது. இருந்தும் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. என்னும் ஒரு கிழமை கழித்து ஊரடங்கை நீக்கியிருக்கலாம் என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. முதலில் என்னை நானே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எனக்குத் தொற்று வந்தால் அதனால் எனது குடும்பமே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலை உண்டு. ஒவ்வொருவரும் எனக்கு வராது எனக்கு வராது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தனிமனித பாதுகாப்பு தான் எமக்குப் பாதுகாப்பாக இருக்கும் ஊரடங்கு போடப்பட்ட காலத்திலிருந்து அத்தியாவசிய தேவை, கழிவகற்றல் குடிநீர்த் தேவைகளை சபையால் வழங்கி வருகின்றோம்.

ஒருங்கிணைந்த சுகாதாரத் துறை சார்ந்தவர்கள் ஊரடங்கு காலத்தில் எந்தவித தொடர்பும் இல்லாமல் வேலைகளைச் செய்த னர். துப்புரவுத் தொழிலாளர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். சாதாரணமாக எமது வீட்டில் இருந்து வேறு வீட்டுக்குச் செல்லும் வேளையில் துப்புரவுத் தொழிலாளர்கள் சேவைகளைச் செய்திருக்கிறார்கள்

ஆளுநரின் செயலாளரைச் சந்தித்து சில கோரிக்கைகளை முன்வைத்தோம். மாஸ்க் (முகமூடி) தட்டுப்பாடாக இருந்தது. வாங்க முடியாத நிலை காணப்பட்டது. அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு கோரப்பட்டது.

இனி வருங்காலங்களில் வருமான இழப்புகளைச் சந்திக்க வேண்டிவரும். சரியான முறையில் வழிகாட்ட தவறும் பட்சத்தில் கொரோனா நோயாளிகள் கண்டு பிடிக்கப்படுவர். அவ்வாறு இனங்காணப்பட்டால் ஊரடங்கு எடுக்கச் சாத்தியம் இல்லை. இனித்தான் நிதானமாகச் செயற்பட வேண்டிய காலம் ஆகும்.

இயலாதவர்கள் வாங்கக் கூடிய வகையில் நடமாடும் சேவையை தொடர்ந்து செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு மாதகால நிலைமைகளைப் பார்த்து விட்டு சந்தை நடவடிக்கைகளை முன்னறிவித்தல் வழங்கி நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். சந்தை திறக்கப்படும் போது நடமாடும் சேவைகளை நிறுத்த வேண்டும் - என்றார். (ப-159)

# விவரங்கள் சேகரிப்பு

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து, வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் விவரங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சேகரிக்கப்படுகின்றன. கொரோனா வைரஸ் காரணமாக வெளிநாடுகளில் தொழில்களை இழந்தும், தொழிலில் இருப்பவர்கள் வீட்டுக்கு பணம் அனுப்ப முடியாமலும்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களது விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அவ்வாறான பாதிப்புக்கு உள்ளானவர்களின் குடும்பங்கள் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)




வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முதற்கட்டமாக 7 ஒலிபரப்பு சாதனங்கள் வின்பவர் காற்றாலை நிறுவனத்தினரால் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இந்த சாதனங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ஐ-111)

# அதிக விலைக்கு வவுனியாவில் தேங்காய் எண்ணெய் விற்பனை

## இரு வர்த்தகர்கள் சிக்கினர்

வவுனியா, ஏப்.22

தேங்காய் எண்ணெயை அதிக விலைக்கு விற்பனை செய்தார்கள் என்று தெரிவித்து வவுனியாவைச் சேர்ந்த வர்த்தகர்கள் இருவருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். வவுனியா நகரில், வர்த்தக நிலையங்களைச் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கையில் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது இலுப்பையடிச் சந்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலைய மொன்றில் அதிக விலைக்கு எண்ணையை விற்பனை செய்த வர்த்தகருக்கும் ,பஜார் (பொலிஸ் நிலையத்திற்கு பின்பக்கம்) பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் எண்ணெய்கலனில் ஒட்டப்பட்டிருந்த விலையை நீக்கி அதிக விலைக்கு எண்ணெயினை விற்பனை செய்த வர்த்தகருக்கும் எதிராக இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர். (ப)

## ஜூன் 20...

டும்" என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிப்பு, சுகாதார துறையினருடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். இது தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் தமது தரப்பு நிலைப்பாடுகளை அறிவித்தனர். அதன்போதே மேற்கண்ட கருத்தை தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தார். இதை ஐக்கிய சோசலிஷக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய 'உதயனிடம்' தெரிவித்தார்.

"2ஆம் 3ஆம் திகதிகளில் நடத்தப்படும் கலந்துரையாடலின்போது, தேர்தலை நடத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டால் 4ஆம் திகதி விருப்பு இலக்கங்கள் அறிவிக்கப்படும் அதுவரை தேர்தல் பரப்புரை வேண்டாம் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களை அழைத்து கலந்துரையாடிய பின்னரே தேர்தல் திகதி அறிவிக்கப்படும் நடைமுறை இதுவரை பின்பற்றப்பட்ட நிலையில் இந்தமுறை அதனைமீறி தேர்தல் ஆணைக்குழு தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளது என்று எதிரணி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டாவிட்டால் அரசியலமைப்பு ரீதியில் நெருக்கடி ஏற்படும் என்பதுடன், அது ஏதேச்சதிகார ஆட்சிக்கு வழிவகுக்கக்கூடும் என்றும் குறிப்பிட்டோம். அத்துடன் சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் பொதுச்செயலாளராக பதவி வகிக்கும் பஸில் ராஜபக்ச ஜனாதிபதி செயலணியொன்றின் பிரதானியாக இருக்கிறார். பிரதேச் சபை உறுப்பினர்கள் ஊடாகவே 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுத்தேர்தலிலும் போட்டியிடுகின்றனர். எனவே, இது நிவாரணம் அல்ல, முழுமையாக தேர்தல் பரப்புரையை இலக்காகக்கொண்ட நடவடிக்கையாகும் எனவும் பட்டியலிட்டுக்காட்டினோம்.

எமது கருத்துகளை செவிமடுத்த பின்னர், ' தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருந்தாலும் அந்தத் தினத்தில் உறுதியாக நடக்கும் என்று குறிப்பிடவில்லை. மே மாதத்தில் 2,3 ஆம் திகதிகளில் சந்திப்புகள் நடைபெறவுள்ளன. அதன்பின்னரே உறுதியான அறிவிப்பு வெளியாகும்' என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் எம்மிடம் உறுதியளித்தார்" என்றும் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார் .

(த-44,105)

## நேற்று...

அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். அந்தப் பகுதி நேற்றிலிருந்து முற்றாக முடக்கப்பட்டுள்ளது என்று கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 64 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

"வாழைத்தோட்டம் பண்டாரநாயக்க மாவத்தையில் இந்தியா சென்றுவந்த பெண்ணொருவர் கடந்த 15ஆம் திகதி கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அதன்பின்னர் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் எனப் பலரைத் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தினோம். அவர்களில் இதுவரை 63 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை அந்தப் பகுதியில் குறித்த பெண் உட்பட 64 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரநாயக்க மாவத்தையில் இருந்து அதனை அண்டிய பகுதிகளுக்கு யாரும் தப்பிச் சென்றுள்ளார்களா என்பது குறித்தும் படையினரும் பொலிஸாரும் சுகாதாரப் பிரிவினரும் தேடுதல் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தப்பகுதியிலுள்ள மக்கள் மறைவாக இருக்க வேண்டாம் அனைவரும் தாமாக முன்வந்து தனிமைப்படுத்தலில் ஈடுபட வேண்டும். கொரோனா வைரஸ் தனிநபர் நோய் அல்ல, சமூகத் தொற்று நோய். எனவே, இதனை உணர்ந்து மக்கள் அனைவரும் செயற்பட வேண்டும்" -என்றார்.

(த-22)

## கோத்தாவின்...

மக்களின் உயிருடன் விளையாடும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதவி விலகவேண்டும்." என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தினார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

" கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் எப்படியாவது தேர்தலை வைத்து அதிகாரப்பசியை தீர்த்துக்கொள்வதற்காகவே அரசு முயற்சித்தது. இதனால் தேர்தல் ஆணைக்குழுவை அச்சுறுத்தும் வகையில் ஜனாதிபதியின் செயலாளர் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

மறுபுறத்தில் பாடசாலைகள் மே 11 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவித்துவிட்டு, பிள்ளைகள் பாடசாலைக்குப் போகமுடியும் என்றால் தேர்தலை வைக்கமுடியும் அல்லவா என்ற மனநிலையை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்கு முயற்சித்தது. எவ்வித உறுதியான உத்தரவாதமும் இன்றிமே மே 11 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. ஏப்ரல் 19 ஆம் திகதியுடன் கொரோனா அச்சுறுத்தல் முடிவுக்கு வரும் என சுகாதார அமைச்சர் ஊடகங்கள் வாயிலாக அறிவித்தார். அதாவது ஏப்ரல் 20 முதல் தேர்தல் நடவடிக்கையை ஆரம்பிப்பதே இந்த அறிவிப்பின் பின்புலம். ஆனால், ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு பிறகுதான் அதிக நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

எனவே, அதிகாரத்துக்காக பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிட்டு மக்களின் உயிருடன் விளையாடும் சுகாதார அமைச்சர் பதவி துறக்கவேண்டும்.

அதேவேளை, கொரோனா வைரஸ் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டவேளையிலேயே விமான நிலையத்தை அரசு மூடியிருக்கவேண்டும். எமது நாட்டுக்கு வந்தவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பியிருக்கவேண்டும்.

ஆனால், அவ்வாறு செய்யவில்லை. ஒரு சிலரே தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பட்டனர். ஏனையோர் வீடு திரும்பினர். இதன்காரணமாகவே சமூக தொற்று அதிகரித்தது. ஆக, நாட்டுக்கு 'கொரோனா'வை இந்த அரசுதான் வரவழைத்தது. இது தேசிய உற்பத்தி அல்ல, அரச இறக்குமதி." - என்றார். (த-44)

## நாடாளுமன்றைக்...

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசமைப்பின் மூலம் எனக்குள்ள அதிகாரத்துக்கு அமைவாக கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே மார்ச் மாதம் 2 ஆம் திகதி, இருந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து உண்மையான மக்கள் கருத்தை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய புதிய நாடாளுமன்றத்தை உருவாக்குவதற்காக ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கும் புதிய நாடாளுமன்றத்தை மே மாதம் 14 ஆம் திகதி கூட்டுவதற்கும் தீர்மானித்தேன். அதனடிப்படையில் சுயாதீனமான தேர்தலை நடத்துவதற்கு அவசியமான முழுமையான சுதந்திரம் மற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பொறுப்பு கையளிக்கப்பட்டது. என்னுடையதும் தேர்தல்கள் ஆணைக்குழுவினதும் பிரதான கடமை மற்றும் பொறுப்பு தேர்தலின் மூலம் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு மக்களுக்குள்ள ஜனநாயக உரிமையை மதித்து குறித்த காலத்தில் தேர்தலை நடத்தி மக்களின் இறையாண்மையை உறுதி செய்வதாகும்.

ஆனால் தற்போதைய தொற்றுநோய் காரணமாக காலவரையறையின்றித் தேர்தலைப் பிற்போடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தைக் கலைத்து 3 மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதற்கான இறுதித் திகதி ஜூன் மாதம் 2 ஆம் திகதியாகும். அதற்காக தேர்தலை எத்தினத்தில் நடத்துவது என்ற தீர்மானத்தை எடுக்கவேண்டியது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த தினத்தை மாற்றிய சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவாகும்.

தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சந்தர்ப்பம் உண்டு. அவர்களுக்கு அவசியமாயின் தேர்தலுக்காக ஒரு நாளின்றி பல நாள்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

தற்போதைய அரசமைப்பில் தேர்தல்கள் தொடர்பாக பெரியளவு அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

தேர்தலை நடத்துமாறு அல்லது ஒத்திவைக்குமாறு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுக்க நான் தயாரில்லை. நான் இதுவரை அனைத்து நடவடிக்கைகளையும் அரசமைப்புக்கு அமைய மேற்கொண்டிருப்பதோடு, புதிய நாடாளுமன்றத்தை கூட்டும் நாளையும் அறிவித்துள்ளேன். ஜூன் மாதம் 2 ஆம் திகதி ஆகும்போது தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டிருக்காவிடின் எனக்கு நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு முடியாது. அதனை வேறொரு நாளிலேயே நடத்த வேண்டும். எவ்வாறாயினும் பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு அவசியமில்லை. அதற்கான சட்டரீதியான அதிகாரமும் இல்லை. தற்போது கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு முன்னெடுத்துள்ளது. நாட்டின் அனைத்து பிரதான கட்சிகள் உட்பட பல்வேறு குழுக்கள் தேர்தலுக்காக உரிய முறையில் வேட்பு மனுக்களை தாக்கல்செய்துள்ளன. அதனடிப்படையில் தேர்தலை நடத்தும் பொறுப்பு தற்போது சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது. அதற்காக அவர்களுக்கு அவசியமான அனைத்து யாப்பு ரீதியான ஒத்துழைப்பையும் அரசு வழங்கியுள்ளது.

தேர்தலை தொடர்ந்தும் பிற்போடுமாறு கூறுவதன் மூலம் நாட்டை அரசமைப்பு ரீதியான நெருக்கடிக்கு கொண்டு செல்ல முடியும் என்று கனவு காண்பவர்களின் உள்நோக்கம் என்ன என்பதை மக்கள் சரியாக புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு எது தேவை, அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பாக விசேட அரசமைப்பு ரீதியான பிரச்சினை தற்போதைய சூழ்நிலையில் இல்லை. அரசமைப்பின் பிரகாரம் எது நடைபெறவேண்டும் என்பது தெளிவாக உள்ளதுடன், இறுதிப்பொறுப்பு யாரிடமுள்ளது என்பது பற்றி எவ்வித சந்தேகமும் இல்லை. என்றுள்ளது. (இ.5)

# மரண அறிவித்தல்

## ஜெகதீஸ்சந்திரன் தங்கம்மா



மூளாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்சந்திரன்- தங்கம்மா நேற்று (21.04.2020) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தர் லோகாம்பிகையின் மகளும், காலஞ்சென்ற கந்தசாமி அன்னம்மாவின் மருமகளும், காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், இரத்தினசபாபதி, தம்பிராசா மற்றும் தனலட்சுமி, பரமநாதன்,தேவநாதன் ஆகியோரின் சகோதரியும், கமலாலயம், சின்னையா, குணசேகரன் மற்றும் காலஞ்சென்றவர்களான சுபாஸ்சந்திரன், சக்தி (மணி) முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துணியும், ஜெயச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியகலாவின் அன்பு மாமியாரும், கிருத்திகன், சங்கீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.04.2020) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மூளாய் பித்தனை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய்

தகவல்;
குடும்பத்தினர்.

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்



வவுனியா வடக்கில் ஊரடங்குச் சட்டத்தினால் தமது வாழ்வதாரத்தை இழந்தவர்களுக்கு வவுனியா மாவட்டச் செயலரால் அண்மையில் உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ம-110)




சுன்னாகம் ஐயனார் ஆலயத்தால் கந்தரோடை ஐயனார் கோவிலடி, அளவெட்டி, சண்டிலிப்பாய், கல்லாரை ஆகிய பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ழ-20)



திருகோணமலை ஆலங்கேணி லக்ஷமி நாராயணர் ஆலய நற்பணி மன்றத்தால் பல்வேறு பகுதிகளில் வாழும் சுமார் 1,200 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கல்வி பொருளாதார அமைப்பின் அனுசரனையுடன், இயக்கச்சி, முகாவில், மாசார் ஆகிய கிராமங்களில் வசிக்கும், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)




வவுனியா செட்டிகுளம் உதவிடும் கைகள் அமைப்பால் அனிஸ் ரவல்ஸ் நிறுவனத்தினரின் நிதிப்பங்களிப்பில் செட்டிகுளம் பிரதேசத்தில் 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ரு)





கொரோனோ நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள தினக்கூலி பெறுவோருக்கு இமையாணன் அபிவிருத்திக் குழுவால் இமையாணனைச் சேர்ந்த தினக்கூலித் தொழிலாளர்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-108)



கனேடிய உறவுகளின் நிதி உதவியில் வாதரவத்தை அக்காச்சி குடியிருப்பில் 70 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. கனடாவில் செயற்பட்டுவரும் 'நம் உறவுக்கு நாமே கைகொடுப்போம்' என்ற தன்னார்வ அமைப்பின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ம)



மல்லாகம் குளமங்கல் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ம)





கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக, யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக யாழ் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்





முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-222)




தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 60 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கினர். (ம-60)



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் போடப்பட்ட ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)




போரால் குடும்பத்தவர்கள் உள்ளிட்ட உறவுகளை இழந்து அநாதரவாக்கப்பட்டிருந்த நிலையில் செஞ்சோலையில் வளர்க்கப்பட்டு திருமணம் முடித்து வாழ்ந்துவரும் 62 குடும்பங்களுக்கு மயிலிட்டியைச் சேர்ந்த கனடா வாழ் புலம்பெயர் உறவின் நிதி உதவியில் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ம)



பொன்னாலை மற்றும் கீரிமலை வசந்தபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு 'வசந்தம் விசன்' அறக்கட்டளை ஊடாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)





கொரோனா வைரஸ் தாக்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு புலம்பெயர் அமைப்பான ஜேர்மனி நூறன்பேர்க் ஈழம் விளையாட்டுக் கழகம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. (ம)



கொரோனா ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மன்னார் பெரியகடை ஞானவைரவர் தேவஸ்தானத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. லிங்கேஸ்வர ஆலய அறநெறி மண்டபத்தில் வைத்து இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-213)








மன்னார் மாவட்டத்தில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு போரம் நிறுவனத்தால் உதவிகள் வழங்கப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டோரின் 100 குடும்பங்கள் இந்த உதவியால் பயன்பெற்றன. (ம)

# கொரோனாத் தடுப்பு ஊசி மனிதர்களிடம் சோதனை!

லண்டன், ஏப்ரல் 22

கொரோனா வைரஸுக்குத் தடுப்பு ஊசியைக் கண்டுபிடித்துள்ள பிரிட்டன், அதை மனிதர்களிடம் சோதித்துப் பார்த்துள்ளோம் என்றும் அறிவித்துள்ளது.


சீனாவின் வுகான் மாநகரில் டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் கொரோனா வைரஸ் அவதானிக்கப்பட்டது. இன்று உலகின் 210 நாடுகளில் கொரோனா வைரஸ் வேரூன்றியுள்ளது. உலகில் 25 லட்சம் மக்கள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வைரஸுக்கு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கு உலக நாடுகள் முழு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அமெரிக்கா,



சீனா நாடுகளில் கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பு மருந்து மனிதர்களுக்குச் சோதனை செய்யப்பட்டது. இந்த நிலையில் தற்போது பிரிட்டனும் கொரோனா தடுப்பூசியை மனிதர்களுக்குச் சோதனை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியைக் கண்டுபிடிப்பதற்காக பிரிட்டன் அரசு நியமித்துள்ள குழுவின் உறுப்பினர் ஜோன்பெல் தெரிவித்ததாவது:

மனிதர்களிடம் கொரோனாவைரஸ் தடுப்பூசி சோதனையை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தொடங்கி விட்டது. தடுப்பு ஊசி கண்டுபிடிப்பது என்பது முக்கியம் அல்ல. அது எந்த அளவுக்கு பயன் அளிக்கும் என்பதே விஞ்ஞானிகளின் தற்போதைய கவலையாக இருக்கிறது - என்றார். (ம)



## பாம்பிடமிருந்து எஜமானைக் காத்து கோமா நிலைக்குச் சென்றது நாய்!

புதுடெல்லி, ஏப். 22

வீட்டுக்குள் நுழைய முயன்ற விரியன் பாம்பைக் கொன்று எஜமான் குடும்பத்தினரை காப்பாற்றிய நாய், பாம்பு கடித்ததால் விஷம் ஏறி 'கோமா' நிலைக்குச் சென்றது.

வாயில்லா ஜீவன்களின் பாசமும், விசுவாசமும் சில நேரங்களில் மனிதர்களை ஆச்சரியப்படுத்தும். அதனாலேயே, வாயில்லா ஜீவன்களை வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்க மனிதர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். அதிலும் சில நாய்கள் தனக்கு உணவூட்டி செல்லமாக வளர்க்கும் எஜமான்களை எதிரிகளிடம் இருந்து காப்பாற்ற தன்னுடைய உயிரையே பணயம் வைக்கும். அப்படியொரு நெகிழ்ச்சிச் சம்பவம், மதுரையில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.


குறித்த நாயின் எஜமானின் வீட்டின் முற்றத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 3 அடி நீளமுள்ள கண்ணாடி விரியன் பாம்பு வந்துள்ளது. அதைப் பார்த்த நாய் குரைத்தது. ஆனால், பாம்பு திரும்பி போகாமல் வீட்டிற்குள் செல்ல முயற்சி செய்தது. கோபமடைந்த நாய், பாம்புடன் சண்டையிட்டுள்ளது. இதில், பாம்பும், நாயை தொடை, முகம் உள்ளிட்ட பல இடங்களில் கடித்துள்ளது. இதில் கடைசியில் நாய் பாம்பை கடித்துக் கொன்றாலும் அது மயக்கமடைந்து கிடந்தது. காலையில் எழுந்து பார்த்தவர்கள், நாய் மயக்கமடைந்து கிடப்பதும், அதன் அருகில் கொடிய விஷம் கொண்ட கண்ணாடி விரியன் பாம்பு இறந்து கிடப்பதைப்பார்த்தும் அதிர்ச்சியடைந்தனர். உயிருக்குப் போராடும் நாய்க்கு தீவிர சிகிச்சை வழங்கப்படுகிறது. (ம)

## இயல்புக்கு திரும்புகிறது தெ.கொரியா

சியோல், ஏப். 22

தென்கொரியாவில் கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர்.

பெப்ரவரி மாதம் 18ஆம் திகதிக்குப் பிறகு அதாவது இரண்டு மாதங்களுக்குப் பிறகு தென்கொரியாவில் கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை ஒற்றை இலக்க எண்ணாகப் பதிவாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு ஊரடங்கு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு அந்நாட்டு மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர். (ம)



கச்சா விலை வீழ்ச்சி

## ஒரு டொலருக்கும் கீழ் சென்றுள்ளது

*அமெரிக்க வரலாற்றில் முதல்முறை*

வொஷிங்டன், ஏப்ரல் 22

அமெரிக்கா வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத் அளவுக்குக் கச்சா எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்தது. ஒரு டொலருக்கும் கீழாக கச்சாவின் விலை சென்றது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உலக அளவிலும், அமெரிக்காவிலும் பொருளாதாரச் செயல்பாடுகள் நின்றுவிட்டதால் உற்பத்தியான கச்சா எண்ணெயை வாங்க நிறுவனங்கள் முன் வரவில்லை. இதனால் அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் முதல் முறையாக கச்சா எண்ணெய் பூஜ்ஜியம் டொலருக்கும் கீழ் சென்றது.

இந்த நிலை, கச்சா எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள், தாங்கள் உற்பத்தி செய்துள்ள பெட்ரோலியக் கச்சா எண்ணெயைச் சேமித்து வைக்க போதிய இடவசதி இல்லாததால், கச்சா எண்ணெய் வாங்கும் நிறுவனங்கள், வியாபாரிகளுக்கு உற்பத்தி நிறுவனங்கள் பணத்தைக் கொடுத்து, கச்சா எண்ணெயை வாங்கி வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறும் நிலைக்கு ஒப்பாகும். (ம)


# கிம் உடல்நிலை கவலைக்கிடமா?

## அமெரிக்க ஊடகங்கள் அதிர்ச்சித் தகவல்

பியாங்யாங், ஏப். 22

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுக்கு இம்மாதத் தொடக்கத்தில் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கிம்மின் உடல் நிலை மோசமாகி இருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து வடகொரியாவின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் தென்கொரியாவின் என்கே செய்தி நிறுவனம் தரப்பில், 'ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் வடகொரிய அதிபர் கிம்முக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மவுண்ட் கும்



காங் ரிசார்ட்டில் உள்ள ஒரு வில்லாவில் தொடர்ந்து அவர் சிகிச்சை பெற்று வருகிறார்' என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. கிம் ஜோங்கின் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதாக வடகொரிய அரசுத் தரப்பில் எந்த அதிகார பூர்வத் தகவலும் வெளியாகவில்லை.

இந்த நிலையில் இதய அறுவை சிகிச்சைக்குப் பின்னர் வடகொரிய அதிபர் கிம்மின் உடல்நிலை மிக மோசமாக உள்ளதாக சி.என்.என் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால், இதனை தென்கொரியா மறுத்துள்ளதுடன் கிம்மின் உடல் நிலை மோசமான நிலையில் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. (ம)

# திட்டமிட்ட திகதியில் ரி20 உலகக்கிண்ணம்

## அதற்காகக் கடும் முனைப்பு என்று ஆஸி. கிரிக்கெட் சபை தெரிவிப்பு





சிட்னி, ஏப். 22
ரி20 உலகக்கிண்ணத் தொடரை திட்டமிட்டவாறு நடத்த கடும் முனைப்புக் காட்டுகின்றோம். எனினும் ஓகஸ்ட் மாதமே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்தது.
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலகமெங்கும் பல்வேறு விளையாட்டுக்கள் கைவிட்பட்டுள்ளன. மிகப்பெரும் விளையாட்டுத் திரு விழாவான ஒலிம்பிக் தொடர் பிற்போடப்பட்டுள்ளது. ஐ.பி.எல் தொடர் காலவரையறை இன்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. விம்பிள்டன் கைவிடப்பட்டுள்ளது. யூரோ கிண்ணக் கால்பந்தாட்டம் பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த வருடத்தின் மற்றொரு முக்கிய தொடரான ரி20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறுமா இல்லையா? என்பதில்தான் பலரதும் எதிர்பார்ப்பு இருந்தது. இவ்வாறிருக்க இது தொடர்பில் ஓகஸ்ட் இறுதியில் முடிவெடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை.
இது தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் சார்பில், கொரோனா தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை எடுத்துள்ள முடிவுகள் தொடர்ந்தால் ரி20 உலகக்கிண்ணம் நடைபெறுவது தடைப்படும். ஏனெனில் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவுக்குள் வெளிநாட்டவர்கள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ணத் தொடர் ஓகஸ்ட் மாதம் இடைப்பகுதிக்குள் நடத்தத் திட்டமிடப்பட்டது. எனவே திட்டமிட்ட திகதிக்குள் தொடரை நடத்த வேண்டுமெனில் ஆஸ்திரேலியா பயணத் தடையைத் தளர்த்த வேண்டும். அதற்கு கொரோனா ஆபத்து உலகில் இருந்து நீங்க வேண்டும். எனினும் உலகக்கிண்ணத் தொடரை திட்டமிட்ட திகதியில் நடத்துவதற்கு கடும் முனைப்புக் காட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இலங்கை தெ.ஆபிரிக்க தொடர்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 22
இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலா ஒருநாள் மற்றும் ரி20 தொடர்கள் ஒத்தவைக்கப்பட்டுள்ளன.
கொரோனா பரவல் காரணமாக உலகெங்கும் பல்வேறுபட்ட கிரிக்கெட் தொடர்கள் பிற்போடப்பட்டுள்ளன. ஜுன் மாதம் போட்டிகள் மீண்டும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டன. கொரோனா வைரஸ் மேலும் தீவிரமாகியதை அடுத்து ஜுனில் நடைபெறவிருந்த இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ரி20, ஒருநாள் தொடர்கள் பிற்போடப்பட்டுள்ளன. (ம)

## சச்சினின் சிக்சரை மறக்காத அக்தர்!

புதுடெல்லி, ஏப். 22
2003ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் தனது பந்துவீச்சில் சச்சின் விளாசிய சிக்சர், இன்றும் தன் மனதில் பதிந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரான அக்தர்.
இந்த சிக்சர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அக்தர் மேலும் தெரிவித்ததாவது:
சச்சினுக்கு எதிராகப் பந்துவீசியது நல்ல அனுபவம். உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரரான அவரை நான் அதிக முறை வீழ்த்தியுள்ளேன். ஆனாலும் 2003ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் செஞ்சூரியனில் நடைபெற்ற ஆட்டத்தில் என்னுடைய பந்தில் சச்சின் அடித்த சிக்ஸரைத்தான் அனைவரும் ஞாபகம் வைத்திருக்கிறார்கள். அதுதான் அவர்களை மிகவும் சந்தோஷப்படுத்தியுள்ளது. ஒரேயொரு சிக்ஸர் 1.3 பில்லியன் மக்களைச் சந்தோஷப்படுத்தும் எனத் தெரிந்திருந்தால் ஒவ்வொரு நாளும் என் பந்தில் அவரை சிக்ஸர் அடிக்க விட்டிருப்பேன்' என்றார். (ம)




ஐபிஎல்லின்

## சிறந்த பந்து வீச்சாளர் மலிங்கதான்

### பீட்டர்சன் புகழாரம்

ஐபிஎல் தொடரின் தலைசிறந்த பந்து வீச்சாளர் மலிங்கதான் என்று கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.
கொரோனாவால் ஐபிஎல் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் முன்னாள் வீரர்கள், வர்ணனையாளர்கள் கடந்த காலத்தின் சிறந்த நிகழ்வுகள் குறித்து பேசி வருகின்றனர்.
கருத்துக் கணிப்பில் டோனி, ரோகித் சர்மா ஆகியோர் சிறந்த கேப்டன்களாக தெரிவு செய்யப்பட்டனர். இந்த நிலையில் ஐபிஎல்லில் எல்லாக் காலக்கட்டத்திலும் சிறந்த பந்து வீச்சாளர் மலிங்கதான் என்று கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
என்னை பொறுத்த வரைக்கும் மலிங்கதான் சிறந்த பந்து வீச்சாளர். அவர் விளையாடிய போட்டிகளையும் தொடர்ச்சியாக யார்க்கர் பந்துகளை வீசியதையும் ஒவ்வொருவரும் கவனித்திருக்கலாம். மலிங்க என்னுடைய பையன்.
நான் சுனில் நரைனைத்தான் தெரிவு செய்திருக்க வேண்டும். ஆனால், சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில்தான் அவரால் விக்கெட் வீழ்த்த முடிந்தது. மேலும், அவரது பந்து வீச்சு குறித்து விமர்சனமும் எழுந்தது. அதனால் நரைன் பெயரை சொல்ல தயங்கினேன். மலிங்கவை தெரிவு செய்தேன்- என்றார்.



## சூதாடிகள் அணுகுவார்கள் மிகஅவதானமாக இருங்கள்

### ஐ.சி.சி எச்சரிக்கை

சூதாட்டத் தரகர்கள் உங்களை அணுகுவார்கள். அதனால் மிக அவதானமாக இருங்கள் என்று சர்வதேச வீரர்களை எச்சரித்துள்ளது ஐ.சி.சி.
இது தொடர்பில் ஐ.சி.சி மேலும் தெரிவித்ததாவது:
சர்வதேச வீரர்களை சூதாட்டத் தரகர்கள் அணுக இந்தக் காலப்பகுதிகளில் அதிக வாய்ப்புக்கள் உள்ளன. உங்களை ரசிகர்கள் போல அணுகும் சூதாட்டத் தரகர்கள் பின்னர் தமது வலையில் சிக்கவைத்து விடுவார்கள். ஆதலால் இத்தகையோரிடம் மிகமிக அவதானமாக இருங்கள் என்றுள்ளது. (ம)

வாடகைக்கு
நல்லூரில் அனெக்ஸ், ஒரு அறை, சமையலறை, குளியலறை, ஹோல் உடன் பெண்களுக்கு மட்டும் வாடகைக்கு
070 287 7082


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.